**குண்டு வெடிப்பு வழக்குகளுக்கான சிறப்பு அமர்வு நீதிமன்றம்**
**கோயம்புத்தூர்.**

**முன்னிலை : திரு. எம்.ஸ்ரீனிவாசன், பி.எஸ்ஸி.,பி.எல்.,**
**குண்டு வெடிப்பு வழக்குகளுக்கான**
**சிறப்பு அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர்**

**2016-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 -ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**அமர்வு வழக்கு எண். 1/2016**

(குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கோயம்புத்தூர் அவர்களின் முதல்நிலைப் பதிவேட்டு வழக்கு எண் 8/2015 ஆக கோப்பிலெடுத்து, சிங்காநல்லூர் காவல் நிலைய குற்ற எண். 846/2014)

WEB COPY

| | | |
|---|---|---|
| குற்ற முறையிடுபவர் | : | அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>சிங்காநல்லூர் காவல் நிலையம் |
| எதிரி / குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர் / விலாசம் | | வி.வி.சந்தோஷ்குமார்<br>த/பெ. வாசன்,<br>சி.21, சர்க்கரை செட்டியார் நகர்,<br>வரதராஜபுரம்,<br>சிங்காநல்லூர்,<br>கோவை. |
| எதிரி மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு | : | <u>குற்றச்சாட்டு</u><br>இ.த.ச.பிரிவு 302 (கொலை செய்தல்) |
| எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| நீதிமன்றத்தின் முடிவு | : | முடிவாக எதிரி மீது இ.த.ச.பிரிவு 302-ன் படியான குற்றச்சாட்டு ஐயம் திரிபர |

| | | |
|---|---|---|
| | | மெய்ப்பிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| தண்டனையின் விவரம் | : | எதிரி இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யப்படுகிறார். |

WEB COPY

இந்த வழக்கானது இறுதியான விசாரணைக்காக 20.04.2016 அன்று இந்நீதிமன்றத்தின் முன் வந்து, அரசுக்காக அரசு கூடுதல் சிறப்பு வழக்கறிஞர் திரு.J.அமலநாதன் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.P.ஜெயச்சந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், நாளது வரை பரிசீலனையில் இருந்து வந்து, இன்று 22.04.2016 இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும் :-

<u>**தீர்ப்புரை**</u>

எதிரிக்கும், ஜெயசுவாசினிக்கும் இடையே கடந்த 2007-ஆம் வருடம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் நடைபெற்றுள்ளது. திருமணமான சில மாதங்களிலிருந்தே எதிரிக்கும், ஜெயசுவாசினிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு ஜெயசுவாசினி அடிக்கடி சேலத்திலுள்ள

தனது பெற்றோர் வீட்டிற்கு சென்று வந்துள்ளார். இந்நிலையில் ஜெயசுவாசினிக்கு செயற்கை கருத்தரிப்பு மூலம் இரட்டை குழந்தைகள் பிறந்துள்ளது. 2011-ஆம் வருடம் வெளிநாடு சென்று திரும்பிய எதிரி தனது மனைவியை பல முறை சமாதானம் செய்து வீட்டிற்கு திரும்பி வர அழைத்தும் வர மறுத்ததால் எதிரி, ஜெயசுவாசினியை விவாகரத்து செய்ய முடிவு செய்து நோட்டீஸ் அனுப்பியதற்கு ஜெயசுவாசினி விவாகரத்து நோட்டீஸில் கையெழுத்திட மறுத்துள்ளார். இதன் காரணமாக ஆத்திரமடைந்த எதிரி 29.09.2014-ஆம் தேதி மனைவியை தொடர்பு கொண்டு சேர்ந்து வாழலாம் என்று ஆசை வார்த்தைகள் கூறியதால் ஜெயசுவாசினி தனது இரு குழந்தைகளுடன் சேலத்திலிருந்து வந்து எதிரிக்கு தகவல் தெரிவித்துள்ளார். எதிரி காரை எடுத்துக்கொண்டு மனைவியையும், குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு ஜோதி நகரிலுள்ள தனது சித்தி வீட்டில் குழந்தைகளை விட்டு விட்டு சேலம் சென்று வருவதாக கூறி தனது மனைவியை காரில் ஏற்றிச் சென்று 30.04.2014-ஆம் தேதி அதிகாலை 3.30 மணியளவில் திருச்சி ரோடு, ஒண்டிப்புதூர் மேம்பாலம், பட்டணம் சர்வீஸ் ரோட்டின் முகப்பில் உள்ள செந்தில் மணல் டிப்போ காம்பவுண்ட் சுவர் ஓரம் காரை நிறுத்தி எதிரி, தனது மனைவியிடம் மரியாதையாக விவாகரத்து பத்திரத்தில் கையெழுத்து போடு என்று கூற அதற்கு ஜெயசுவாசினி மறுக்கவே எதிரி ஜெயசுவாசினியின் தலைமுடியை பிடித்து கார் கண்ணாடியோடு சேர்த்து அழுத்தி "உன்னால் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் நிம்மதியே போச்சு, நீ செத்தால் தான் எங்களுக்கு நிம்மதி, இத்தோடு செத்து ஒழிடீ" என்று கூறி ஓட்டுநர் இருக்கைக்கு அருகில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து

WEB COPY

ஜெயசுவாசினியின் இடது பக்க கழுத்தில் ஓங்கி குத்தியதால் ரத்தம் வெளியேறி மயங்கிய ஜெயசுவாசினியை ரோட்டோரம் தள்ளி விட முயற்சித்த போது அந்த வழியாக வந்த ரோந்து போலீசார் மேற்படி காருக்கு அருகே வந்ததைப் பார்த்த எதிரி காரிலிருந்து இறங்கி தப்பியோடியுள்ளார் என்றும், பின்னர் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த ஜெயசுவாசினி ஆம்புலன்ஸ் மூலம் கோவை அரசு மருத்தவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட வழியிலேயே தனது கழுத்தில் ஏற்பட்ட ஆழமான கத்திக் குத்துக் காயத்தின் காரணமாக இறந்து போயுள்ளதால் எதிரியாகிய உம்மீது இ.த.ச. பிரிவு 302-ன் படி கீழ் தண்டிக்கத்தக்கதும், இந்நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்கதுமான குற்றச் செயல் புரிந்துள்ளதால் உம்மீது மேற்கண்ட பிரிவின் கீழ் குற்றச்சாட்டு வனையப்படுகிறது.

WEB COPY

2. இந்த வழக்கு முதலில் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கோயமுத்தூர், முதல் நிலைப் பதிவேட்டு வழக்கு எண்.8/2015 ஆக கோப்பில் எடுக்கப்பட்டுள்ளது. எதிரி முன்னிலையானதும், வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச.பிரிவு 207-ன் படி எதிரிக்கு வழங்கப்பட்டுள்ளது. எதிரி மீதான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால் இந்த வழக்கை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கோயமுத்தூர் அவர்கள், கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு கு.வி.மு.ச.பிரிவு 209 (அ படி அனுப்பி வைத்திருக்கிறார். முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கு அமர்வு வழக்கு எண் 1/2016 ஆக 08.01.2016 அன்று கோப்பில்

எடுக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து அந்த வழக்கு விசாரணைக்காக இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்த நீதிமன்றத்தில் 19.01.2016 அன்று கோப்பில் எடுக்கப்பட்டு, விசாரணை செய்யவும், தீர்ப்புரை பகரவும் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.

3. இந்த வழக்கில் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் வழக்குக் கோப்பு பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது. எதிரி இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள குற்றத்தை செய்திருக்கலாம் என்று அனுமானம் ஏற்படக்கூடிய அளவிற்கு காரணங்கள் இருந்ததால் குற்றச்சாட்டு இ.த.ச.பிரிவுகள் 302-ன்படி வனையப்பட்டது. குற்றச்சாட்டு குறித்து எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டது. எதிரி குற்றச்சாட்டை மறுத்து வழக்கை எதிர்கொள்ள தயாராக இருந்ததால் வழக்கு விசாரணை தொடங்கியது.

WEB COPY

4. அரசு தரப்பில் மொத்தம் 20 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 26 சான்றாவணங்களும், 19 சான்று பொருட்களும் குறியிடப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்று பொருட்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எதிரி தரப்பில் 1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு:-</u>**

5. அ.சா.1 ஜோதி கடந்த 29.09.2014-ஆம் தேதி பி9 சரவணம்பட்டி காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது அன்று

இரவு கோவை மாநகர கட்டுப்பாட்டு அறை மூலம் கிழக்கு உட்கோட்ட பிரிவுக்கு இரவு ரோந்துக்காக நியமிக்கப்பட்டு டி.என்.66 ஜி 0635 என்ற டாடா சுமோ போலீஸ் வாகனத்தில் அதன் ஓட்டுனர் முதல்நிலைக்காவலர் ராஜேந்திரன் உடன் இரவு 22.00 மணிக்கு ரோந்து அலுவலில் இருந்ததாகவும், சரவணம்பட்டி மற்றும் பீளமேடு பகுதியில் ரோந்து முடித்து விட்டு அதிகாலை 3.30 மணிக்கு சிங்காநல்லூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட ஒண்டிப்புதூர் சோதனை சாவடிக்கு சென்று தணிக்கை செய்துவிட்டு அதே வாகனத்தில் திரும்பி வரும் போது ஒண்டிப்புதூர் மேம்பாலத்திற்கு முன்பு அதன் இறக்கத்தில் பட்டணம் சர்வீஸ் ரோட்டில் ஒரு கார் சந்தேகப்படும்படியாக நின்று கொண்டிருந்தது என்றும், தான் உடனே தனது டிரைவரிடம் சொல்லி தான் சென்ற வாகனத்தை ரிவேர்ஸ் எடுக்க சொல்லி அந்த காரின் அருகே சென்றதாகவும், அப்போது காரில் இருந்த ஒரு நபர் தங்களை பார்த்ததும் ஓடினார் என்றும், தானும், தனது ஓட்டுனரும் மேற்படி நபரை துரத்தி சௌறதாகவும், பட்டிணம் ரோட்டில் துரத்தி சென்றோம் என்றும், எதிரே இரண்டு நபர் இரு சக்கர வாகனத்தில் வந்தனர் என்றும், அவர்கள் உதவியுடன் மேற்படி நபரை பிடித்து அந்தக் காரின் அருகே வந்து பார்த்த போது அந்தக் காரின் முன் இருக்கையில் டிரைவர் சீட்டின் அருகில் ஒரு பெண் இரத்தக்காயத்துடன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார் என்றும், எதிரியிடம் உம்மிடம் கேட்கையில் எதிரி தனது பெயர் சந்தோஷ்குமார் த/பெ. வாசன் என்றும், சக்கரை செட்டியார் நகர், சிங்காநல்லூர் என்று சொன்னார் என்றும், வண்டியினுள் காயத்துடன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த நபரை தனது மனைவி ஜெயசுவாசினி என்று கூறினார் என்றும், உடனே தான் ஒயர்லெஸ்

WEB COPY

மூலம் சிங்காநல்லூர் காவல் நிலையத்திற்கு தொடர்பு கொண்டு ஆம்புலன்ஸ் ஒன்றை அனுப்ப சொன்னதாகவும், அந்த ஏரியாவில் ரோந்தில் இருந்த காவலர் 758 ரங்கநாதன் என்பவரை ஒயர்லெஸ் மூலம் தொடர்பு கொண்டு அந்த சம்பவ இடத்திற்கு வரச் சொனனதாகவும், ஆம்புலன்ஸ் வந்ததும் காயத்துடன் இருந்த ஜெயசுவாசினியை ஆம்புலன்சில் ஏற்றி துணையாக மேற்படி காவலரை அதே ஆம்புலன்சில் கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், எதிரியை ஆய்வாளர் விசாரிக்கையில் அவர் தானும், தனது மனைவியும் மூன்று வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், டைவர்ஸ் கேஸ் போடுவதற்காக 29.09.2014-ஆம் தேதி சிங்காநல்லூருக்கு வரச் சொன்னதாகவும், சந்தோஷ்குமாரின் மனைவி ஜெயசுவாசினி டைவர்ஸ் கேஸ்க்கு கையெழுத்து போட ஒத்துக் கொள்ளாததால் கொலை செய்ய முடிவு செய்து ஒண்டிப்புதூர் மேம்பாலத்திற்கு அருகே கூட்டி வந்து கத்தியால் குத்தியதாகவும் சொன்னார் என்றும், எதிரி போலீசை பார்த்ததும் ஓடியதாகவும், எதிரியை சிங்காநல்லூர் காவல்நிலையத்திற்கு தனது வாகனத்தில் அழைத்து வந்ததாகவும், சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட கார் டி.என்.37 பி டபிள்யூ 3340 நிஷான் சன்னி காரையும் சிங்காநல்லூர் காவல்நிலையத்திற்கு எடுத்து வந்ததாகவும், ஆம்புலன்சில் அனுப்பப்பட்ட காவலர்களை தான் தொடர்பு கொண்டு காயம் பட்ட ஜெயசுவாசினியை பற்றி தான் விசாரிக்கையில் வரும் வழியிலேயே ஜெயசுவாசினி இறந்துவிட்டதாக டாக்டர் கூறியதாக முதல்நிலைகாவலர் தன்னிடம் சொன்னதாகவும், தான் தனியறிக்கை தயார் செய்து 30.09.2014-ஆம் தேதி உதவி ஆய்வாளரிடம் அதிகாலை 5.00 மணிக்கு எதிரியையும், வாகனத்தையும் அப்போது

WEB COPY

அலுவலில் இருந்த உதவி ஆய்வாளர் திருமதி.பர்வீன் பானு என்பவரிடம் ஆஜர் படுத்தினேன் என்றும், இது சம்பந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும், தான் உதவி ஆய்வாளரிடம் கொடுத்த தனியறிக்கை அ.சா.ஆ.1 ஆகும் என்றும், தான் ஒப்படைத்த எதிரி ஓட்டி வந்த கார் சா.பொ.1 ஆகும் என்றும், காண்பிக்கப்படும் புகைப்படங்கள் அந்த காரை குறித்து ஆய்வாளரால் எடுக்கப்பட்டவை என்றும், புகைப்படங்கள் சா.பொ.2 தொடராகும் (4 எண்ணிக்கைகள்). என்றும் கூறியுள்ளார்.

6. அ.சா.2 கதிர்வேல் 29.09.2014-ஆம் தேதி சிங்காநல்லூர் சக்கரை செட்டியார் காலனிக்கு எதிரி வந்ததாகவும், (எதிரி) தன் மனைவியை காரில் கூட்டி வந்ததாகவும், ஒண்டிப்புதூர் மேம்பாலத்துக்கு அருகில் வந்த போது தன் மனைவி தன் பெற்றோர்களை தரக்குறைவாக பேசினார் என்றும், அதனால் அவர் ஆவேசமடைந்து கத்தி எடுத்து இடது பக்க கழுத்தில் மனைவியை குத்து விட்டதாக சொன்னார் என்றும், தன் மனைவி பெயர் ஜெயசுவாசினி என்று சொன்னார் என்றும், அவ்வாறு சொன்ன பிறகு தாங்கள் அனைவரும் காருக்கு அருகில் சென்று பார்தத போது, அவரின் மனைவி ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார் என்றும், ஆய்வாளர் சிங்காநல்லூர் காவல்நிலையத்திற்கு போன் செய்து ஆம்புலன்ஸ் அனுப்பும்படி சொன்னார் என்றும், இரவு ரோந்துப் பணியிலிருந்த போலீசாருக்கு தகவல் கொடுத்து, ரோந்து போலீசாரும் ஆம்புலன்சில் மேற்படி ஜெயசுவாசினியை ஏற்றிக் கொண்டு பெரிய ஆஸ்பத்திரி சென்றார்கள் என்றும், தன்னையும், ஜெயராமையும் காருக்கு அருகிலேயே நிற்க சொல்லிவிட்டு எதிரியை

WEB COPY

அழைத்துக் கொண்டு ஆய்வாளர் சிங்காநல்லூர் காவல்நிலையம் சென்று விட்டதாகவும், இரு சக்கர வாகனத்தில் மற்றொரு போலீசார் சிங்காநல்லூரிலிருந்து வந்தார்கள் என்றும், காரை எடுத்துக் கொண்டு சிங்காநல்லூர் காவல்நிலையத்திற்கு சென்று விட்டார்கள் என்றும், கார் எண் தெரியும் என்றும், காரை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியுமா என்றால் ஞாபகமில்லை என்றும், கார் எண். 3340 ஆகும் என்றும், கோவை ரிஜிஸ்ட்ரேசன் ஆகும் என்றும், அன்றே காலை 4.00 மணிக்கு தானும், ஜெயராமும் சிங்காநல்லூர் காவல் நிலையம் சென்றோம் என்றும், சரவணம்பட்டி ஆய்வாளர் சிங்காநல்லூர் காவல்நிலையத்தில் அமர்ந்து எழுதிக் கொண்டிருந்தார் என்றும், சரவணம்பட்டி ஆய்வாளர் காலை 4.30 மணிக்கு ஸ்டேஷனை விட்டு போன பிறகு நாங்கள் அங்கேயே இருந்தோம் என்றும், சிங்காநல்லூர் ஆய்வாளர் காலை 5.15 மணிக்கு வந்தார் என்றும், சிங்காநல்லூர் ஆய்வாளர் எதிரியை விசாரித்தார் என்றும், எதிரி நடந்த விஷயங்களை சொன்னதாகவும், இது சம்பந்தமாக எதிரியை சிங்காநல்லூர் ஆய்வாளர் கைது செய்வதாகவும், தன்னையும், ஜெயராமையும் கையெழுத்து செய்ய முடியுமா என்றும் கேட்டதாகவும், தாங்கள் கையெழுத்து செய்கிறோம் என்று சொன்னதாகவும், சிங்காநல்லூர் ஆய்வாளரிடம் எதிரி கடைசியாக என்ன சொன்னார் என்றால் சரவணம்பட்டி ஆய்வாளரிடம் என்ன சொன்னாரோ அதை தான் அவரிடமும் சொன்னதாகவும், மேற்கொண்டு எதுவும் சொல்லவில்லை என்றும், மேற்படி வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது ஆகும் என்றும், மேற்படி தன்னுடைய கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகும் என்றும், காலை 8.00 மணி முதல் 8.30

WEB COPY

மணிக்குள் சந்தோஷ்குமார் (எதிரி), தான், ஜெயராமன், சிங்காநல்லூர் ஆய்வாளர், ஜீப் டிரைவர் ஆகியோர் செந்தில் மணல் லாரி ஆபிசக்கு அருகே போனதாகவும், காம்பவுண்ட் அருகில் முட்புதர் இருந்தது என்றும், அதிலிருந்து எதிரி கத்தியை எடுத்தார் என்றும், அந்த கத்தி கருப்பு பிடி கொண்ட ஸ்டீல் கத்தியாகும் என்றும், மேற்படி கத்தியை எதிரி எடுத்து ஆய்வாளரிடம் ஒப்படைத்து அந்த கத்தியால் தான் தன் மனைவியை குத்தியதாக சொன்னார் என்றும், கத்தியை வாங்கிக் கொண்டு சிங்காநல்லூர் காவல் நிலையத்திற்கு போகலாம் என்று சொல்லி மீண்டும் அனைவரும் சிங்காநல்லூர் காவல்நிலையம் சென்றதாகவும், கத்தியை கைப்பற்றியதற்காக சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் வைத்து தானும், ஜெயராமனும் கையெழுத்து போட்டதாகவும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அது அ.சா.ஆ.3 ஆகும் என்றும், 7-ஆம் நெம்பர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கு.வி.மு.ச.பிரிவு 164-ன் படி நான் வாக்குமூலம் கொடுத்த போது மூன்று கையெழுத்துக்கள் போட்டதாகவும், மூன்று கையெழுத்துக்களும் அ.சா.ஆ.4 வரிசையாகும் என்றும், இரண்டு முறை சிங்காநல்லூர் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், சந்தோஷ்குமார் எடுத்து ஆஜர் செய்த கத்தி தான் தன்னிடம் காட்டப்படுவதாகும் என்றும், அது சா.பொ.3 ஆகும் என்றும், ஆய்வாளர் என்னை விசாரித்த போது மகசரில் தான் எங்கு வைத்து கையெழுத்து போட்டேன் எனறு சொல்லியுள்ளேன் என்றால் சிங்காநல்லூர் காவல்நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டதாக சொல்லியுள்ளேன் என்றும், வேறு எங்கும் வைத்தும் கையெழுத்து போட்டதாக சொல்லவில்லை என்றும் கூறியுள்ளார்.

WEB COPY

7. அ.சா.3 ஜெயராமன் 29.09.2014-ஆம் தேதி நான் இரவு பேமண்ட் வாங்குவதற்காக தானும், நண்பர் கதிர்வேலும் மலுமிச்சம்பட்டிக்கு தன்னுடைய ஹீரோ ஹோண்டா பைக்கில் இரவு 10.00 மணிக்கு போனதாகவும், ராமகிருஷ்ணன் என்பவரிடம் பணம் வாங்குவதற்காக சென்றதாகவும், ராமகிருஷ்ணணிடம் பணம் வாங்கிக் கொண்டு ராமகிருஷ்ணணின் கட்டிடத்திலேயே படுத்துக் கொண்டதாகவும், அதிகாலை 3.00 மணி சுமாருக்கு இருகூருக்கு கிளம்பியதாகவும், வருகிற வழியில் காலை 3.30 மணியளவில் திருச்சி ரோடு மேம்பாலத்திற்கு அருகில் செந்தில் மணல் டிப்போவுக்கு எதிரில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி தாங்கள் வந்து கொண்டிருந்ததாகவும், இடது பக்கத்தில் ஒரு டிரான்ஸ்பார்மர் உள்ளது என்றும், டிரான்ஸ்பார்மர் முன்புறம் தாங்கள் வந்து கொண்டிருந்த போது போலீசார் டேய் நில்லுடா என்று சத்தம் போட்டு கொண்டே ஒருவரை துரத்திக் கொண்டு வந்தார்கள் என்றும், இன்ஸ்பெக்டர் அந்த நபரை பிடித்து விட்டார் என்றும், அந்த நபரை பிடித்தவுடன் ஏன் ஓடினாய் என்று ஆய்வாளர் அந்த நபரை கேட்டார் என்றும், ஆய்வாளரிடம் தன் பெயர் சந்தோஷ்குமார் என்று எதிரி சொன்னதாகவும் என்றும், காரில் எதிரியும், அவரது மனைவியும் வந்து கொண்டிருந்த போது தனது மனைவி தனது பெற்றோர்களை பற்றி தகாத முறையில் பேசியதாகவும், எனவே எதிரி காரில் வைத்திருந்த கத்தியை எடுத்து தனது மனைவியை கழுத்தில் குத்தி விட்டதாக சொன்னார் என்றும், தாங்கள் அனைவரும் எதரியை அழைத்துக் கொண்டு காருக்கு அருகில் போய் பார்த்த போது, எதிரியின் மனைவி இடது புற கழுத்தில் குத்துப்பட்டு சீட்டில் மயக்க நிலையில் இருந்தார் என்றும், இன்ஸ்பெக்டர் ஒயர்லெஸ் மூலம்,

WEB COPY

ஆம்புலன்ஸ் வரச்சொல்லியும், ரோந்துப் படையினரை வரச்சொல்லியும் அழைத்தார் என்றும், பிறகு என்.ஜி. மருத்துவமனையின் ஆம்புலன்ஸ் வந்தது என்றும், ரோந்துப் பணியினரும் வந்தார்கள் என்றும், ஆம்புலன்ஸில் எதிரியின் மனைவியை ஏற்றி விட்டு ஒரு தலைமைக் காவலரும் கூட சென்றார் என்றும், ஆய்வாளரும், எதிரியும் ஆய்வாளர் ஜீப்பில் டிரைவருடன் சிங்காநல்லூர் காவல்நிலையத்திற்கு சென்றார்கள் என்றும், தானும், கதிர்வேலும் காருக்கு காவலாக நின்றதாகவும், ஆய்வாளரின் ஓட்டுனர் ஒரு பைக்கில் கார் இருந்த இடத்திற்கு வந்தார் என்றும், பைக்கை கதிர்வேலிடம் கொடுத்து விட்டு மேற்படி ஓட்டுனர் சா.பொ.1 காரை எடுத்துச் சென்றார் என்றும், தானும், கதிர்வேலும் தனித்தனி பைக்கில் சிங்காநல்லூர் காவல் நிலையம் சென்றதாகவும், சரவணம்பட்டி ஆய்வாளர் சிங்காநல்லூர் காவல் நிலையத்திற்குள் ஏதோ எழுதி கொண்டிருந்தார் என்றும், தானும், கதிர்வேலும் டீ சாப்பிட சென்று விட்டோம் என்றும், அ.சா.3 மேலும் தன் சாட்சியத்தில் காலை 5.00 மணியளவில் எதிரியாகிய உம்மனைவி இறந்து விட்டார் என்ற தகவலை எதிரியின் மனைவியுடன் சென்ற தலைமைக் காவலர் சிங்காநல்லூர் உதவி ஆய்வாளருக்கு தகவல் சொன்னார் என்றும், உடனே சிங்காநல்லூர் உதவி ஆய்வாளர் சிங்காநல்லூர் ஆய்வாளரை வரச்சொல்லி தகவல் கொடுத்தார் என்றும், காலை 5.30 மணிக்கு சிங்காநல்லூர் ஆய்வாளர் வந்துவிட்டார் என்றும், எதிரியின் மனைவி இறந்துவிட்டதால் எதிரியிடம் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றும், வாக்குமூலத்தில் எதிரி காரில் இருந்த கத்தியை எடுத்து வலது புறத்திலிருந்து எடுத்து இடது புறத்தில் தனது மனைவியின் கழுத்தில் குத்தியதாக கூறினார் என்றும், வாக்குமூலத்தை தான்

WEB COPY

படித்து பார்க்கவில்லை என்றும், எனவே கடைசியாக என்ன எழுதப்பட்டிருந்தது என்று தெரியவில்லை என்றும், எதிரி பயன்படுத்திய கத்தியை எடுத்துத் தருவதாக சொல்லி பட்டிணம்புதூர் சர்வீஸ் ரோட்டிற்கு அருகில் கூட்டிச் சென்றார் என்றும், செந்தில் மணல் டிப்போ காம்பவுண்ட் ஓரமாக முட்புதரில் இருந்து கத்தியை எதிரி சிங்காநல்லூர் ஆய்வாளரிடம் எடுத்து கொடுத்ததாகவும், ஆய்வாளர் கத்தியை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினாா என்றும், அதில் தான் அதே இடத்தில் கையெழுத்து செய்தேன் என்றும், ஆய்வாளர் கைப்பற்றிய கத்தி தன்னிடம் காட்டப்படும் சா.பொ.3 தான் ஆகும் என்றும், 05.11.2014-ஆம் தேதி நீதித்துறை நடுவர் எண்.7 நீதிமன்றத்திற்கு தன்னை வரச்சொன்னார்கள் என்றும், நீதிமன்றத்தில் தன்னிடம் இரகசிய வாக்குமூலம் வாங்கினார்கள் என்றும், சம்பவம் பற்றி தனக்கு என்ன தெரியுமோ அதை தான் சொல்லியுள்ளதாகவும், 07.11.2014-ஆம் தேதி சிங்காநல்லூர் ஆய்வாளர் என்னை காவல்நிலையம் வரச் சொல்லியிருந்தார் என்றும், அங்கு தன்னை ஆய்வாளர் விசாரித்ததாகவும், 30.09.2014-ஆம் தேதி தன்னிடம் எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றும், எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள தன் கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.5 ஆகும் என்றும், கத்தியை கைப்பற்றியதற்கான மகசர் அ.சா.ஆ.6 ஆகும் என்றும், சா.பொ.1 கார் தான் சம்பவ தினம் எதிரி ஓட்டி வந்த கார் என்றும் கூறியுள்ளார்.

8. அ.சா.4 குமரேசன் எதிரி தன் பெரியப்பா ஏ.பி.சண்முகத்தின் மருமகனாகும் என்றும், திருமணத்திற்கு பிறகு எதிரியும், ஜெயசுவாசினியும்

WEB COPY

கோவை சக்கரையார் தெருவில் குடியிருந்து வந்தார்கள் என்றும், அவர்கள் இருவருக்குள் அடிக்கடி சண்டை வரும் என்றும், எதிரி ஜெயசுவாசினியை சேலத்திற்கு கொண்டு வந்து விட்டு விட்டு செல்வார் என்றும், பிறகு பெரியவர்கள் சொல்லி பேசி சமாதானம் செய்து மீண்டும் சேர்த்து வைப்பார்கள் என்றும், ஜெயசுவாசினி இறப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சேலத்தில் தன் பெரியப்பா வீட்டில் தான் இருந்தார் என்றும், 29.09.2014-ஆம் தேதி பகல் 3.00 மணியிலிருந்து 3.30 மணிக்குள் தனது பெரியப்பா ஏ.பி.சண்முகம் தனக்கு போன் செய்து தன் மகள் ஜெயசுவாசினி, மருமகன் சந்தோஷ்குமாருடன் பிழைக்க போகிறது என்றும், கொண்டு போய் கோயமுத்தூரில் மருமகன் (எதிரி) வீட்டில் விட்டு வரும்படியும் சொன்னார் என்றும், தானும், ஜெயசுவாசினி மற்றும் அவரது இரு குழந்தைகளுடன் சேலத்திலிருந்து பேருந்து மூலம் கோயம்புத்தூருக்கு அன்றைய தினம் சுமார் இரவு 8.00 மணியிலிருந்து 8.30 மணியளவில் எதிரியின் வீட்டிற்கு சென்றதாகவும், தாங்கள் போன போது கதவு சாத்தியிருந்தது என்றும், பெல் அடித்து பார்த்தும், யாரும் திறக்கவில்லை என்றும், எனவே சிறிது நேரம் வீட்டிற்கு வெளியே எதிர்த்தாற்போல் உட்கார்ந்திருந்ததாகவும், சுமார் இரவு 10.00 மணியிலிருந்து 10.30 மணிக்குள்ளாக எதிரி காரில் வந்து ஜெயசுவாசினியையும், இரு குழந்தைகளையும் காரில் ஏற்றிக் கொண்டு சென்று விட்டதாகவும், தான் திரும்ப சேலம் சென்று விட்டதாகவும், சேலம் போய் என் பெரியப்பாவிடம் தகவல் சொல்லி விட்டதாகவும், மறுநாள் காலை 5.00 மணிக்கு தன் பெரியப்பா தனக்கு போன் செய்தார் என்றும், எதிரி ஜெயசுவாசினியை

WEB COPY

கத்தியால் குத்தி விட்டதாகவும், கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாகவும், கோயம்புத்தூர் சென்று வரலாம் என்று தன்னை அழைத்ததாகவும், கோவை சிங்காநல்லூர் காவல் நிலையத்திலிருந்து தன் பெரியப்பாவுக்கு அவருடைய மொபைல் போன் மூலம் தகவல் வந்ததாக சொன்னார் என்றும், உடனே தான் தனது பெரியப்பா, பெரியம்மா புஷ்பலதா, தன் மாமா ஜானகி ராமன் அனைவரும் காரில் கோயம்புத்தூர் அரச மருத்துவமனைக்கு காலை சுமார் 11.00 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாக வந்தடைந்ததாகவும், தாங்கள் வருவதற்கு முன்பே ஜெயசுவாசினி இறந்திருந்தார் என்றும், ஜெயசுவாசினியின் பிரேதம் கோவை அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் இருந்தது என்றும், பி5 ஆய்வாளர் பிரேத பரிசோதனை செய்த போது இறந்த நபர் தன் பெரியப்பா ஏ.பி.சண்முகத்தின் மகளும், எதிரியின் மனைவியுமான ஜெயசுவாசினி தான் என்பதை ஊர்ஜிதப்படுத்தியதாகவும், அன்றைய தினம் ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும், தான் நடந்த விவரங்களை தெரிவித்ததாகவும், 05.11.2014-ஆம் தேதி கோயம்புத்தூர் நீதித்துறை நடுவர் எண்.7 நீதிமன்றத்திற்கு சென்று வாக்குமூலம் அளித்து வந்தேன் என்றும் கூறியுள்ளார்.

9. அ.சா.6 ஏ.பி.சண்முகம் ஜெயசுவாசினிக்கு கடந்த 2007-ஆம் ஆண்டு கோயம்புத்தூர், சிங்காநல்லூர் சக்கரை செட்டியார் நகரை சேர்ந்த வாசன் என்பவரது மகனும், எதிரிக்கும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் செய்து கொடுத்ததாகவும், திருமணம் முடிந்து ஓராண்டு காலம் தன் மகளும், மருமகனும் சந்தோஷமாக இருந்தனர் என்றும், ஆனால் அவர்களுக்கு

WEB COPY

குழந்தைகள் ஏதும் பிறக்கவில்லை என்றும், அதனால் டெஸ்ட் ட்யூப் வாயிலாக 2009-ஆம் ஆண்டு தன் மகளுக்கு சிகிச்சை கொடுக்கப்பட்டு கர்ப்பம் தரித்து 2010-ஆம் ஆண்டு மே மாதம் இரட்டை குழந்தைகள் சேலத்தில் பிறந்தன என்றும், குழந்தை பிறந்த பின் சுமார் 6 மாதம் கழித்து தன் மகள் அவளது மாமனார் வீடான கோயம்புத்தூருக்கு குழந்தைகளுடன் வந்து விட்டார் என்றும், அவ்வாறு குழந்தைகள் கோயம்புத்தூர் வந்த பின் சுமார் 7, 8 மாதங்களில் தன் மருமகன் அயல்நாட்டிலிருந்து திரும்பி வந்து விட்டார் என்றும், அடிக்கடி குடும்ப தகராறு தன் மகளுக்கும், மருமகனுக்கும் இடையே வரும் என்றும், தாங்கள் சமாதானப்படுத்தி கொண்டு வந்து விட்டு விட்டு செல்வோம் என்றும் 29.09.2014-ஆம் தேதி தனது மகள் ஜெயசுவாசினியும், இரண்டு குழந்தைகளும் சக்கரை செட்டியார் வீதியில் உள்ள தன் கணவரை பார்த்து விட்டு வருவதாக தன் தம்பி மகன் குமரேசனுடன் கோவை வந்தார்கள் என்றும், சேலத்தில் மதியம் 3.30 மணிக்கு புறப்பட்டு கோவைக்கு 8.30 மணி சுமாருக்கு வந்தார்கள் என்றும், 29.09.2014-ஆம் தேதிக்கு முன்பு எதிரிக்கும், தன் மகளுக்கும் குடும்ப உறவு சுமூகமாக இல்லை என்றும், சுமார் இரண்டு ஆண்டுகள் தன் மகள் தன் வீட்டில் தான் சேலத்தில் இருந்தார் என்றும், பஞ்சாயத்தார் மூலமாக சமாதானத்திற்கு ஏற்பாடு செய்ததாகவும், சமாதானம் ஆகவில்லை என்றும், கடைசியில் சமாதானப்படுத்தி 29.09.2014-ஆம் தேதி திங்கள்கிழமை கோவை வருவதாக இருந்தது என்றும், ஆனால் அதற்கு முந்தைய தினம் ஞாயிற்றுக்கிழமையே சேர்ந்து வாழ விருப்பமில்லையென்றும், பிரித்து விடவேண்டுமென்றும், அது சம்பந்தமாக தான் பைசல் பேச வேண்டுமென்றும் சொல்லி எதிரியின் குடும்பத்தினர்

WEB COPY

சார்பாக சேலத்திலிருந்த பஞ்சாயத்தார்கள் தன்னிடம் பேசினார்கள் என்றும், இவ்வாறு வேண்டாம் என்று மாப்பிள்ளை வீட்டார் சொல்கிறார்கள் என்று தன் மகளிடம் சொன்னதாகவும், ஆனால் தன் மகள் கேட்காமல் ஒரு முறை தன் கணவரை பார்த்து, நேரடியாக பேசிவிட்டு வருவதாக சொன்னதால் தான் குமரேசனுடன் 29.09.2014-ஆம் தேதி ஜெயசுவாசினியை குழந்தைகளுடன் கோவைக்கு அனுப்பி வைத்ததாகவும், 29.09.2014-ஆம் தேதி இரவு சுமார் 8.30 மணியளவில் குமரேசனுடன் தான் தொடர்பு கொண்டு பேசிய போது அவர் சக்கரை செட்டியார் தெருவில் உள்ள எதிரியின் வீட்டிற்கு எதிரில் அமர்ந்திருப்பதாகவும், இரவு 10.00 மணியிலிருந்து 10.30 மணியளவில் தான் மீண்டும் குமரேசனுடன் தொடர்பு கொண்டு பேசிய போது தன் மாப்பிள்ளை இரவு 10.00 மணி சுமாருக்கு நிஷான் சன்னி காரில் வீட்டிற்கு வந்ததாகவும், தன் மகளையும், குழந்தைகளையும் காரில் அழைத்துக் கொண்டு சந்தோஷமாக செல்வதாகவும் குமரேசன் தன்னிடம் சொன்னார் என்றும், தானும் வருவதாக சொன்ன போது வரவேண்டாமென்றும், ஊருக்கு செல்லும் படியும், குமரேசனிடம் ஜெயசுவாசினி தெரிவித்ததாகவும் குமரேசன் சொன்னார் என்றும், 30.09.2014-ஆம் தேதி அதிகாலை 5.30 மணியிலிருந்து 6.00 மணிக்குள்ளாக கோயம்புத்தூர் சிங்காநல்லூர் காவல்நிலையத்திலிருந்து போலீசார் அவர் மொபைல் போனிலிருந்து தன்னுடைய மொபைல் போனுக்கு அழைத்து ஜெயசுவாசினியை, அவர் கணவர் கத்தியால் குத்தி அவர் இறந்து விட்டதாகவும், கோவை அரசு மருத்துவமனைக்கு வரும்படியும் தங்களுக்கு தகவல் தெரிவித்தார்கள் என்றும், தானும், தன் மனைவி மற்றும் குடும்பத்தாருடன் உடனே புறப்பட்டு கோவை அரசு மருத்துவமனைக்கு

WEB COPY

வந்ததாகவும், தாங்கள் கோவைக்கு சுமார் 11.00 மணிக்கு வந்ததாகவும், சவக்கிடங்கில் இருந்த தனது மகள் பிரேதத்தின் மீது சிங்காநல்லூர் ஆய்வாளர் மேற்கொண்ட பிரேத விசாரணையின் போது உடனிருந்து இறந்து போன நபர் தன் மகள் ஜெயசுவாசினி தான் என்பதை ஊர்ஜிதப்படுத்தியதாகவும், இது சம்பந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் கூறியுள்ளார்.

10. அ.சா.7 ரங்கநாதன், சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராக பணிபுரிந்த போது 29.09.2014-ஆம் தேதி இரவுப் பணிக்கு வந்தேன் என்றும், பிறகு தனக்கு இருகூரிலிருந்து ஒண்டிப்புதூர் வரை இருப்புப் பாதையை கண்காணிக்கும் பணி ஒதுக்கப்பட்டது என்றும், 30.09.2014-ஆம் தேதி அதிகாலை 3.45 மணிக்கு சரவணம்பட்டி உதவி ஆய்வாளர் ஜோதி அவர்கள் மைக்கில் சிங்காநல்லூர் காவல்நிலையத்திற்கு தொடர்பு கொண்டு ஒரு ஆம்புலன்சை பட்டணம் புதூர் சர்வீஸ் ரோடு அருகில் உள்ள செந்தில் மணல் குடோன் காம்பவுண்ட் சுவர் அருகே அனுப்பி வைக்கும்படி சொன்னார் என்றும், பிறகு தன்னை ஒயர்லெஸ் மூலம் தொடர்பு கொண்டு சரவணம்பட்டி ஆய்வாளர் சம்பவ இடம் குறித்து சொல்லி தன்னை அங்கு வர சொன்னதாகவும், தான் அந்த இடத்திற்கு தன்னுடைய சொந்த இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும், அங்கு சென்று பார்த்த போது சரவணம்பட்டி ஆய்வாளர் அவருடைய வாகனத்தில் ஓட்டுனர் மேலும் இரண்டு பேர் அங்கு நின்று கொண்டிருந்தார்கள் என்றும், ஒரு கார் நின்று கொண்டிருந்தது என்றும், தான் போய் அங்கு நின்றவுடனேயே ஆம்புலன்ஸ் அங்கு வந்தது என்றும், அங்கு நின்ற காரில் ஒரு பெண் உயிருக்கு போராடிக்

WEB COPY

கொண்டிருந்தது தெரிய வந்தது என்றும், தான் பார்த்த போது அந்தப் பெண் மயக்க நிலையில் இருந்தார் என்றும், அந்தப் பெண்ணுக்கு இடது பக்க கழுத்தில் ஒரு இரத்தக் காயம் இருந்தது என்றும், அந்தப் பெண்ணை ஆம்புலன்சில் ஏற்றி தானும் உடன் ஏறி ஆய்வாளர் உத்தரவுப்படி அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், தாங்கள் சென்ற போது அந்தப் பெண்ணின் பெயர் ஜெயசுவாசினி என்றும், அவரது அப்பா பெயர் சண்முகம் என்றும், சேலம், குகைப் பகுதியை சேர்ந்தவர் என்றும் ஆய்வாளர் தன்னிடம் சொன்னதாகவும், தான் பேப்பரில் குறித்து கொண்டதாகவும், தாங்கள் நேராக அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், தாங்கள் அரசு மருத்துவமனைக்கு சென்ற போது காலை நேரம் 4.10 மணி இருக்கும் என்றும், தானும், ஆம்புலன்ஸ் டிரைவரும் அந்தப் பெண்ணை ஸ்ட்ரெக்சரில் வைத்து அவசரசிகிச்சைப் பிரிவுக்கு எடுத்து செனறதாகவும், அங்கு பணியிலிருந்த மருத்துவர் பரிசோதித்து பார்த்து விட்டு அந்த பெண் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக சொன்னார் என்றும் கூறியுள்ளார்.

WEB COPY

11. அ.சா.8 வடிவேல் 29.09.2014-ஆம் தேதி இரவு சுமார் 8.30 மணியளவில் தான் வேலை முடிந்து வந்த போது வாசன் வீட்டிற்கு முன்பு ஒரு பெண்ணும், இரண்டு குழந்தைகளும், அருகில் குடியிருக்கும் பெண்களும் சேர்ந்து சுமார் 5, 6 பேர் பேசிக் கொண்டிருந்தார்கள் என்றும், தான் வீட்டிற்குள் சென்று விட்டதாகவும், மழை வந்ததால் அந்தப் பெண்ணை அருகிலிருந்தவர்கள் வீட்டிற்குள் வருமாறு கூப்பிட்டார்கள என்றும், அந்தப் பெண் வரமாட்டேன் என்று சொல்லி விட்டார என்றும், அதன்பின் அந்த

பெண்ணை அழைத்து தன் வீட்டு போர்டிகோவில் உட்கார வைத்திருந்தார்கள் என்றும், இரவு 10.00 மணியிலிருந்து 11.00 மணிக்குள்ளாக சத்தம் கேட்டது என்றும், எதிரி வந்து கூப்பிட்டவுடன் அந்த பெண்ணும், குழந்தைகளும் காரில் அவருடன் சென்று விட்டார்கள் என்றும், அனைவரும் சென்றுவிட்டார்களா என்றால் ஆமாம் என்றும், இரண்டு நாட்கள் கழித்து ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் கூறியுள்ளார்.

12. அ.சா.9 ஷீலாமணி, 30.09.2014-ஆம் தேதி சிங்காநல்லூர் காவல் நிலைய குற்ற எண் 846/2014 சட்டப்பிரிவு இதச 302-ன் படியான வழக்கில் இறந்து போன ஜெயசுவாசினியின் பிரேதத்தை இறப்பிற்கான மருத்துவ ரீதியான காரணத்தை அறியும் பொருட்டு பிரேத பரிசோதனை செய்ய வேண்டி, ஒரு வேண்டுகோள் கடிதத்துடன் ஆய்வாளர் தன்னை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார் என்றும், பிரேதமானது ஏற்கனவே கோவை அரசு மருத்துவமனையில் இருந்தது என்றும், ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை மருத்துவரிடம் கொடுத்து பிரேதத்தை அடையாளம் காண்பித்ததாகவும், பிரேத பரிசோதனையின் போது அகற்றப்பட்ட பிரேதத்தின் மீதிருந்த உடைமைகளை மருத்துவர் தன்னிடம் ஒப்படைத்ததை பெற்று, தனி அறிக்கையுடன் காவல் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும், அதை படிவம் 91-ல் ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும், பிரேத பரிசோதனை செய்ய ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள்கடிதம் அ.சா.ஆ.7 ஆகும் என்றும், பிரேதத்தின் மீதிருந்த ஆடைகள் முறையே சுடிதார் சா.பொ.4 ஆகும் என்றும், துப்பட்டா சா.பொ.5 ஆகும் என்றும், லெகின்ஸ் பேண்ட்

WEB COPY

சா.பொ.6 ஆகும் என்றும், ஜட்டி சா.பொ.7 ஆகும் என்றும், பிரா சா.பொ.8 ஆகும் என்றும், சிம்மீஸ் சா.பொ.9 ஆகும் என்றும், தான் ஒப்படைத்த உடைமைகளுக்கான படிவம் 91 அ.சா.ஆ.8 ஆகும் என்றும், உடைமைகளல்லாமல் இறந்து போன பெண் அணிந்திருந்த தங்கம் மற்றும் வெள்ளி நகை ஆபரணங்கள் மொத்தம் 6 பொருட்களையும் அதே படிவம் 91 வாயிலாக ஆய்வாளரிடம் ஒப்படைத்ததாகவும், இது சம்பந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் கூறியுள்ளார்.

13. அ.சா.10 திரு.முனிராசன், கடந்த 30.09.2014-ஆம் தேதி கோவை மாநகர சிங்காநல்லூர் காவல் நிலைய குற்ற எண்.846/2014 இதச பிரிவு 302-ன் படியான வழக்கில், ஆய்வாளர் அவர்களின் தொலைபேசி வேண்டுகோள் அடிப்படையில் சிங்காநல்லூர் காவல்நிலையத்திற்கு அதிகாலை 7.00 மணிக்கு போனதாகவும், அங்கு சென்றவுடன் ஆய்வாளர் தனக்கு ஒரு வேண்டுகோள்கடிதம் கொடுத்தார் என்றும், சா.பொ.1 காரில் இருந்த குற்ற சம்பந்தப்பட்ட தடயப் பொருட்களை சேகரித்துக் கொடுக்கும்படி கேட்டிருந்தார் என்றும், டி.என்.37 பி டபிள்யூ 3340 என்ற வாகனத்திலிருந்த தடயப் பொருட்களை சேகரித்துக் கொடுக்கும்படி ஆய்வாளர் தன்னிடம் கேட்டிருந்தார் என்றும், மேற்படி கார் சிங்காநல்லூர் காவல் நிலைய வளாகத்திற்குள் நிறுத்தப்பட்டிருந்தது என்றும், காரை ஆய்வு செய்ததில் ஒரு கால் மிதியடி ஒன்று, ஒரு ஜோடி செருப்பு, பச்சை நிற எழுதப்பட்ட பாண்டு பேப்பர் ஒன்று, இரண்டு எழுதப்படாத வெள்ளைத்தாள்கள், காரின் முன் இடது சீட்டிலிருந்த இரத்தக் கறை தூய துணியில் ஒட்டி எடுக்கப்பட்டது என்றும்,

WEB COPY

மிதியடியிலிருந்த இரத்தக் கறை தூய துணியில் ஒத்தி எடுக்கப்பட்டது என்றும், பச்சை நிற பேப்பரிலிருந்த இரத்தக் கறை தூய துணியில் ஒத்தி எடுக்கப்பட்டது என்றும், இரத்தக்கறை இல்லாத மாதிரி தூய துணி ஆகியவைகளை ஆய்வாளரிடம் சேகரித்து ஒப்படைத்ததாகவும், மேற்படி பொருட்களை படிவம் 91-ல் ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும், படிவம் 91-ல் தன் கையெழுத்து இல்லை என்றும், படிவம் 91-ஐ சாட்சியிடம் காண்பித்த போது அதில் தன் கையெழுத்து இல்லை என்று கூறினார் என்றும், தான் சேகரித்து கொடுத்த இடது முன்புற சீட்டின் கால் மிதியடி சா.பொ.10 ஆகும் என்றும், பிரௌன் கலர் ஒரு ஜோடி செருப்பு சா.பொ.11 ஆகும் என்றும், இரத்தக்கறை படிந்த பச்சை நிற எழுதப்பட்ட பேப்பர் 2 மற்றும் இரத்தக்கறை படிந்த வெள்ளை நிற எழுதப்பட்ட பேப்பர் 2 ஆகியன சா.பொ. 12 தொடராகும். (4 தாள்கள்). காரின் இடது புற முன் சீட்டிலிருந்து எடுக்கப்பட்ட ரத்தக்கறை படிந்த தூய துணி சா.பொ.13 ஆகும் என்றும், காரின் இடது முன்புற கால் மிதியடியிலிருந்து ரத்தக்கறையை ஒத்தி எடுத்த தூய துணி சா.பொ.14 ஆகும் என்றும், பச்சை தாளிலிருந்த இரத்தக்கறையை ஒத்தி எடுத்த வெள்ளைத் துணி சா.பொ.15 ஆகும் என்றும், இரத்தக்கறை படிந்த செருப்பிலிருந்து ஒத்தி எடுக்கப்பட்ட வெள்ளைத் துணி சா.பொ.16 ஆகும் என்றும், மாதரி வெள்ளைத் துணி சா.பொ.17 ஆகும் என்றும், இது சம்பந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் கூறியுள்ளார்.

14. அ.சா.11 டாக்டர்.புவனா 30.09.2014-ஆம் தேதி அதிகாலை 4.25 மணிக்கு தான் பணியிலிருந்த போது சிங்காநல்லூர் காவல்நிலையம் கிரேட்-1

WEB COPY

காவலர் ரங்கநாதன் என்பவர் சஹாசினி என்பவரை சிகிச்சைக்காக அழைத்து வந்தார் என்றும், அவர் தன் கணவரால் அதே நாள் காலை 3.30 மணிக்கு ஒண்டிப்புதூர் மேம்பாலம் அருகே வைத்து கத்தியால் தாக்கப்பட்டதாக ரங்கநாதன் தன்னிடம் சொன்னார் என்றும், சஹாசினியை பரிசோதித்த போது அவர் இறந்திருந்தார் என்றும், அவர் உடலை பிரேத பரிசோதனைக்காக சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்ததாகவும், தான் வழங்கிய விபத்து பதிவேட்டின் நகல் அ.சா.ஆ.9 ஆகும் என்றும் கூறியுள்ளார்.

15. அ.சா.12 டாக்டர்.ஜெயசிங், 30.09.2014-ஆம் தேதி கோயம்புத்தூர் சிங்காநல்லூர் காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று குற்ற எண்.846/2014 சிங்காநல்லூர் காவல்நிலைய சம்பந்தப்பட்ட ஜெயசுவாசினி என்ற 29 வயது மதிக்கத்தக்க பெண் பிரேதத்தை அன்று மதியம் 3.05 மணியளவில் பிரேத பரிசோதனை மேற்கொண்டதாகவும், மேற்கண்ட பிரேதத்தை பெண் தலைமைக்காவலர் 2230 ஷீலாமணி அவர்கள் அடையாளம் காட்டினார் என்றும், பிரேதம் உடல் முழுவதும் விறைப்புத் தன்மையுடன் காணப்பட்டது என்றும், அதன் கை மற்றும் கால் நகங்கள் வெளிறி காணப்பட்டது என்றும், பிரேதம் மஞ்சள் கலர் பூ போட்ட மேலாடையும், பச்சை கலர் கீழாடை ரத்தக்கறைகளுடன் காணப்பட்டதாகவும், பிரேதத்தில் இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் ஆக காயம் 1. கழுத்தில் முன்புற இடது பக்கத்தில் 4 x 2 செ.மீ. x நுரையீரல் ஆழத்திற்கு ஒரு நெடுவாக்கில் சாய்ந்த குத்துக் காயம் காணப்பட்டது என்றும், காயத்தின் கூர்மையான கீழ் முனை விலா எலும்பிற்கு 2 செ.மீ மேலாகவும், காயத்தின்

WEB COPY

மழுங்கிய மேல்முனை நடுக்கோட்டிலிருந்து 3 செ.மீ இடது புறமாகவும் காணப்பட்டது என்றும், இந்தக் காயமானது கீழ் நோக்கி, உள் நோக்கி சென்று இடது மார்பறைக்குள் புகுந்து அதன் கீழ் உள்ள சதைகள், இரத்த நாளங்கள், நரம்புகள், பெருந்தமனி மற்றும் பெருஞ்சிரைகளை குத்திக் கொண்டு இடது நுரையீரலின் மேல் கதுப்பில் 2 x 1 செ.மீ x 2 செ.மீ ஆழம் வரை சென்றிருந்தது என்றும், இடது புற மேல் கதுப்பு சுருங்கிய நிலையில் காணப்பட்டது என்றும், இடது மார்பறையில் சுமார் 700 மில்லி திரவ ரத்தம் காணப்பட்டது என்றும், காயம் 2. இடது முன்னங்கையில் 3 x 0.5 செ.மீ x தோல் ஆழத்திற்கு கிழித்த காயம் ஒன்று காணப்பட்டது என்றும், ரத்தம் மற்றும் உடல் உள்ளுறுப்புகள் ஆய்விற்கு அனுப்பப்பட்டது என்றும்,இறந்த நபர் அவர் கழுத்தில் ஏற்பட்ட குத்து காயத்தினாலும், அதனால் ஏற்பட்ட உள்ளுறுப்புகளில் ஏற்பட்ட காயத்தினாலும் உண்டான ரத்தப் போக்கினாலும், அதிர்ச்சியினாலும் மரணமடைந்திருக்கிறார் என்றும், இந்த இறப்பானது பிரேத பரிசோதனைக்கு முன்பு சுமார் 12 முதல் 24 மணி நேரத்திற்குள் மரணம் சம்பவித்திருக்கலாம் எனக் கூறி சான்றிதழ் வழங்கினேன் என்றும், பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட இரத்தம் "ஏ" வகையைச் சார்ந்தது என அறிக்கை பெற்றதாகவும், இரசாயன பரிசோதனை அறிக்கையினை பெற்று அதில் எந்தவித நச்சுப் பொருளும் கண்டறியப்படவில்லை என இறுதி கருத்துரை வழங்கியுள்ளேன் என்றும், மருத்துவ பிரேத பரிசோதனை செய்ய ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் தன்னிடம் காண்பிக்கப்படும் ஏற்கனவே அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டது தான் ஆகும் என்றும், தான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.10 ஆகும் என்றும்,

WEB COPY

தனக்கு கிடைக்கப்பெற்ற இரசாயன பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.11 ஆகும் என்றும், தான் வழங்கிய இறுதி கருத்துரை அ.சா.ஆ.12 ஆகும் என்றும், தனக்கு கிடைக்கப்பெற்ற இறந்த நபரின் மாதிரி ரத்தத்தின் பகுப்பாய்வு செய்யப்பட்ட குருதியியல் ஆய்வறிக்கை அ.சா.ஆ.13 ஆகும் என்றும், சா.பொ.3 கத்தியினால் இறந்த நபர் குத்தப்பட்டிருந்தால் நான் மேலே சொல்லியது போல காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் சாட்சி சா.பொ.3 கத்தியை பார்த்து விட்டு அதன் நீள, அகலங்களை பார்க்கும் போது வாய்ப்புள்ளது என்றும், பிரேத பரிசோதனை அறிக்கையில் ஏற்பட்டுள்ள இரண்டாவது காயமானது, காயம் பட்ட நபர் தான் தாக்கப்படுவதை தடுக்கும் போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றும் கூறியுள்ளார்.

WEB COPY

16. அ.சா.13 மாரிமுத்து, 29.09.2014-ஆம் தேதி இரவு 21.00 மணி முதல் சிங்காநல்லூர் காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்ததாகவும், 30.09.2014-ஆம் தேதி அதிகாலை 3.45 மணிக்கு ஒயர்லெஸ் மூலம் சரவணம்பட்டி காவல்நிலைய ஆய்வாளர் திரு.ஜோதி அவர்கள் கூப்பிட்டு ஒரு ஆம்புலன்ஸ் உடனடியாக ஒண்டிப்புதூர் மேம்பாலம், திருச்சி ரோடு, பட்டணம் ரோடு, செந்தில் மணல் ஆபிஸ் முன்பு அனுப்பி வைக்குமாறு தகவல் சொன்னதால் தான் உடனே புறப்பட்டு காவல்நிலையத்தை ஒட்டி உள்ள என்.ஜி. மருத்துவமனை வளாகத்திற்கு சென்று அங்குள்ள ஒரு ஆம்புலன்ஸை மேற்படி இடத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், அதன் பிறகு சுமார் 4.30 மணியளவில் சரவணம்பட்டி காவல் ஆய்வாளர் திரு.ஜோதி அவர்கள், எதிரியையும், அவர் ஓட்டி வந்த நிஷான் சன்னி கார் டிஎன்.37

பி.டபிள்யூ 3340 என்ற வாகனத்துடன் சிங்காநல்லூர் காவல்நிலையத்திற்கு வந்து காவல் நிலையத்திலிருந்த உதவி ஆய்வாளர் திருமதி.பர்வீன் பானு அவர்களிடம் தனி அறிக்கை ஒன்றை புகாராக கொடுத்தார் என்றும், உதவி ஆய்வாளர் அவர்கள் அதைப் பெற்று வழக்கு பதிவு செய்தார் என்றும், இது சம்பந்தமாக புலன் விசாரணை அதிகாரி மகேஸ்வரன் அவர்கள் தன்னை விசாரித்தா என்றும், அதை லேப்டாப்பில் பதிவு செய்து பிரிண்ட் எடுத்து தன்னிடம் காண்பித்தார்கள் என்றும், சா.பொ.1 கார் தான் அன்று காவல்நிலையம் கொண்டு வரப்பட்ட காராகும் என்றும் கூறியுள்ளார்.

WEB COPY

17. அ.சா.14 கே.மாரிமுத்து, 29.09.2014-ஆம் தேதி பகல் 14.00 மணி முதல் 21.00 மணி வரை பணிபுரிந்து வந்த கிரேட்-1 காவலர் 1769 திரு.சந்திரசேகர் என்பவரை ரிலீவ் செய்து 21.00 மணிமுதல் திருச்சி ரோடு செக் போஸ்ட்டில் இரவு அலுவலில் பணியில் இருந்தேன் என்றும், 30.09.2014-ஆம் தேதி அதிகாலை 3.00 மணியளவில் இரவு ரோந்து தணிக்கை அதிகாரி சரவணம்பட்டி காவல்நிலைய ஆய்வாளர் திரு.ஜோதி அவர்கள் தன்னை தணிக்கை செய்து பொது நாட்குறிப்பில் பதிவு செய்து சென்றார் என்றும், அதன் பின் சிங்காநல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் தான் மேலே சொன்ன பொது நாட்குறிப்பை இந்த வழக்கு சம்பந்தமாக தேவைப்படுவதாக படிவம் 91-ல் கைப்பற்றினார் என்றும், இது சம்பந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் கூறியுள்ளார்.

18. அ.சா.15 முத்து, 30.09.2014-ஆம் தேதி சிங்காநல்லூர் காவல்நிலைய ஆய்வாளர் வழக்கு சம்பந்தமாக புகைப்படம் எடுக்க வேண்டி தன்னை

காவல்நிலையத்திற்கு வரச்சொன்னதின் பேரில், அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு சென்று ஆய்வாளர் சொன்ன கோணங்களில் புகைப்படங்களை எடுத்தேன் என்றும், எடுக்கப்பட்ட புகைப்படங்களுக்கு பிரிண்ட் போட்டு ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்றும், தான் புகைப்படம் எடுத்த கேமரா டிஜிட்டல் கேமரா என்பதால் அதற்கு நெகட்டிவ் வராது என்றும், தான் எடுத்த புகைப்படங்கள் தன்னிடம் காட்டப்படும் சா.பொ.2 தொடர் புகைப்படங்கள் தானாகும் என்றும், இது சம்பந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் கூறியுள்ளார்.

WEB COPY

19. அ.சா.16 வினோத் 30.09.2014-ஆம் தேதி காலை சுமார் 8.30, 8.45 மணியிருக்கும என்றும், தானும், தன் நண்பர் ராஜேந்திரனும் கூலி வேலைக்கு செல்வதற்காக ஒண்டிப்புதூரிலிருந்து பட்டணம் சென்று கொண்டிருந்தோம் என்றும், அங்கு போலீசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள் என்றும், போலீசார் தங்களை சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள் என்றும், காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றும், அதில் என்ன எழுதியிருந்தது என்று ஞாபகமில்லை என்றும், பார்வை மகசரில் உள்ள தன் கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.14 ஆகும் என்றும், ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் கூறியுள்ளார்.

20. அ.சா.17 திருமதி.பர்வீன் பானு, 30.09.2014-ஆம் தேதி அதிகாலை 5.00 மணியளவில் தான் நிலைய அலுவலகத்திலிருந்து சரவணம்பட்டி சட்டம், ஒழுங்கு காவல் நிலைய ஆய்வாளர் திரு.டி.ஜோதி அவர்கள் நிலையம் ஆஜராகி இவ்வழக்கின் எதிரி சந்தோஷ்குமார் மற்றும் அவர் ஓட்டி வந்த கார்

எண். டி.எண்.37 பி டபிள்யூ 3340 நிஷான் சன்னி வாகனத்தை ஒப்புவித்து, ஒரு தனி அறிக்கையை சமர்ப்பித்தார் என்றும், அந்த அறிக்கையை பெற்ற தான் அதனடிப்படையில் தங்கள் காவல் நிலைய குற்ற எண்.846/2014 சட்டப்பிரிவு 302 இதச-ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், தனி அறிக்கையையும் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் கனம் நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம் கோவை அவர்களுக்கு அனுப்பி வைத்ததாகவும், ஒரு நகலை தங்கள் காவல் நிலைய ஆய்வாளரின் புலன் விசாரணைக்கு ஒப்புவித்தேன் என்றும், பிற நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், ஆய்வாளர் காவல் நிலையம் வந்தவுடன் புலன் விசாரணைக்காக எதிரியையும், வாகனத்தையும் அவரிடம் ஒப்புவித்தேன் என்றும், இது சம்பந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.15 ஆகும் என்றும் கூறியுள்ளார்.

WEB COPY

21. அ.சா.18 திரு.வெங்கடேஸ்வரன், 20.10.2016 அன்று நீதித்துறை நடுவர் எண்.3 அவர்களின் கடிதம் 1217/2014 நாள் 17.10.2014 என்ற கடிதத்தை பெற்றுக் கொண்டதாகவும், அக்கடிதத்துடன் சிங்காநல்லூர் காவல்நிலைய குற்ற எண், 846/2014 என்ற குற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட 17 சான்று பொருட்களையும் பெற்றுக் கொண்டதாகவும், அவை முறையே 1, கருப்பு நிற பேண்ட், 2. சந்தன கலர் அரைக்கை சட்டை அதில் நீல நிறக் கோடுகளைக் கொண்டது, 3. கருப்பு நிற சிந்தெடிக் கால் மிதி, 4. பிரௌன் மற்றும் நீல நிறங்கள் உடன் கூடிய ஒரு ஜோடி செப்பல், 5. பச்சை மற்றும் வெள்ளை நிற

பிரிண்ட் செய்யப்பட்ட 2 தாள்கள், 6. சிறிய சல்லடை துணி சிறிதளவு, 7. சல்லடை துணி சிறிதளவு, 8. சல்லடை துணி சிறிதளவு, 9, சல்லடை துணி சிறிதளவு, 10. மாதிரி சல்லடை துணி சிறிதளவு, 11. கருப்பு கைப்பிடியுடன் கூடிய 32 செ.மீ. நீளம் உள்ள ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கத்தி, 12. கிழித்து எடுக்கப்பட்ட ஆரஞ்சு மற்றும் பச்சை நிறங்களில் பூ போடப்பட்ட மஞ்சள் நிற சுடிதார் மேலாடை, 13. ஆரஞ்சு மற்றம் பச்சை நிற பூ போடப்பட்ட மஞ்சள் நிற துப்பட்டா, 14. கிழித்து எடுக்கப்பட்ட பச்சை நிற லெக்கின்ஸ் பேண்ட், 15. கிழித்து எடுக்கப்பட்ட கருநீலக்கலர் ஜட்டி, 16. கிழித்து எடுக்கப்பட்ட சந்தன நிற பிரா, 17. கிழித்து எடுக்கப்பட்ட பிங்க் நிற சிம்மீஸ் ஆகியவற்றை பெற்றுக் கொண்டு ரத்தக்கறைகளுக்கான பகுப்பாய்வு செய்ததாகவும், அதில் 1 முதல் 9 வரையிலும், மற்றும் 11 முதல் 17 வரையிலும் உள்ள பொருட்களில் ரத்தம் உள்ளது என்றும், 10-ல் ரத்தக் கறை இல்லை என்றும், இரத்தக்கறைகளில் ரத்த இனம் மற்றும் ரத்த வகை கண்டறிவதற்காக கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவர் அவர்கள் இவ்வழக்கு சம்பந்தமாக பிரேத பரிசோதனை போது சேகரித்து அனுப்பிய மாதிரி ரத்தக்கறையும் பெற்றுக் கொண்டு இந்த மாதிரி ரத்தத்தின் ரத்த வகை கண்டறிவதற்காகவும், தனது துறை இயக்குநர், தடய அறிவியல் துறை சென்னை அவர்களுக்கு குருதி வடிநீரியல் அறிக்கைக்காக அனுப்பி வைத்ததாகவும், இது சம்பந்தமாக தான் வழங்கிய உயிரியல் அறிக்கையை அனுப்பி வைத்ததாகவும், தடயப் பொருட்களை பகுப்பாய்வு செய்வதற்கு வேண்டி நீதிமன்றத்திலிருந்து தனக்கு அனுப்பப்பட்ட கடிதம் அ.சா.ஆ.16 என்றும், தான் வழங்கிய உயிரியல் அறிக்கை அ.சா.ஆ.17 என்றும், தடயப் பொருட்களை பொறுத்து சென்னை பகுப்பாய்வகத்திலிருந்து

WEB COPY

வழங்கப்பட்ட குருதியியல் அறிக்கை அ.சா.ஆ.18 என்றும், இறந்த நபரின் ரத்த வகையை தான் பகுப்பாய்வு செய்து தான் வழங்கிய குருதியியல் ஆய்வறிக்கை அ.சா.ஆ.19 என்றும், இறந்த நபரின் ரத்த வகை "ஏ" வகையை சேர்ந்தது என்று குருதியியல் ஆய்வறிக்கையில் கண்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

22. அ.சா.19 திரு.T.V.ஹேமந்தகுமார், தான் கோவையில் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.7 ஆக பணிபுரிந்த போது பி5 சிங்காநல்லூர் ஆய்வாளர் அக்காவல்நிலைய குற்ற எண். 846/2014 வழக்கில் சம்பந்தப்பட்ட சாட்சிகள் ஜெயராமன், கதிர்வேல், குமரேசன் ஆகியோர்கள் கு.வி.மு.ச.164-ன் படியான சாட்சிய வாக்குமூலத்தில் தான் பதிவு செய்யவேண்டுமென்று 15.10.2014-ஆம் தேதியிட்ட விண்ணப்பத்தை கோயமுத்தூர், தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு கொடுத்ததன் பேரில் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆர்.நெம்பர் 4729/ தேதி 17.10.2014 பிறப்பித்த உத்தரவை நாள் 27.10.2014-ஆம் தேதி பெற்று அந்த கோப்பிற்கு சி.எம்.பி.நெம்பர் 7799/2014 என எண் அளித்து ஆய்வாளர் மூலம் சாட்சிகளை ஆஜர் செய்ய அழைப்பாணை அனுப்பியுள்ளதாகவும், 29.10.2014-ஆம் தேதி பகல் 3.30 மணிக்கு உதவி ஆய்வாளர் திருமதி.பர்வீன்பானு சாட்சிகள் ஜெயராமன், கதிர்வேல், குமரேசன் ஆகியோர்களை ஆஜர்படுத்தியதாகவும், பிற்பகல் 4.20 மணிக்கு சாட்சி ஜெயராமன் என்பவரை முதலில் விசாரித்து அவர் சொன்ன வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், பின்பு சாட்சிகள் கதிர்வேல், குமரேசன் ஆகியோர்களை

WEB COPY

ஒருவர் பின் ஒருவராக விசாரித்து அவர்கள் சொன்ன வாக்குமூலத்தையும் பதிவு செய்ததாகவும், அந்த வாக்குமூலங்களை சாட்சிகளுக்கு படித்து காண்பித்து அவர்கள் சரி என ஒப்புக்கொண்டு தன் முன்னிலையில் கையெழுத்து செய்தார்கள் என்றும், மேற்படி சாட்சிகள் வாக்குமூலம் கொடுப்பதற்கு முன்பு அவர்களுக்கு யாருடைய தூண்டுதல் மற்றம் வற்புறுத்தலோ, மிரட்டலோ இல்லை என்பதை கேட்டு தெரிந்து கொண்டதாகவும், சிங்காநல்லூர் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கோயமுத்தூர் அவர்கள் தனக்கு மேற்சொன்ன மூன்று சாட்சிகளையும் குற்றவியல் விசாரணை முறை சட்டம் 164-ன்படி வாக்குமூலங்கள் பதிவு செய்ய தனக்கு அனுப்பப்பட்ட ஆர்.நெம்பர்.4729 தேதி 17.10.2014 தன்னிடம் காண்பிக்கப்படுவது தான் என்றும், அது அ.சா.ஆ.20 என்றும், அதனடிப்படையில் சி.எம்.பி.நெம்பர் 7799/2014-னு படி மூன்று சாட்சிகளுக்கு நீதிமன்றத்தில் 29.10.2014-ஆம் தேதி பகல் 3 மணிக்கு ஆஜராகும்படி தான் அனுப்பிய அழைப்பாணை அ.சா.ஆ.21 என்றும், அந்த அழைப்பாணையை மூவரும் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை கையொப்பம் இட்டுள்ளனர் என்றும், தன்னால் பதிவு செய்யப்பட்ட மேற்சொன்ன சாட்சிகளின் வாக்குமூலங்கள் நீதிமன்றத்தில் உள்ளன என்றும் கூறியுள்ளார்.

WEB COPY

23. அ.சா.20 திரு.மகேஸ்வரன், தான் பி5 சிங்காநல்லூர் சட்டம் ஒழுங்கு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்த போது, 30.09.2014-ஆம் தேதி காலை சுமார் 5.30 மணிக்கு காவல்நிலைய பெண் உதவி

ஆய்வாளர் திருமதி.பர்வீன் பானு அவர்கள் பதிவு செய்து வைத்திருந்த பி5 சிங்காநல்லூர் காவல்நிலைய குற்ற எண்.846/2014 இதச பிரிவு 302-ன் படி பதிவு செய்திருந்த முதல் தகவல் அறிக்கையினை தன் பார்வைக்கு வைத்திருந்ததை பெற்று தான் இந்த வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டதாகவும், தனது புலன் விசாரணையில் காவல் நிலையத்தில் ஆஜரிலிருந்த ஆஜர் எதிரியை விசாரித்தும், எதிரிதானாக முன் வந்து குற்றத்தை ஒப்புக் கொண்ட காரணத்தினால் எதிரியை காவல்நிலையத்தில் வைத்து கைது செய்தும், சாட்சிகள் கதிர்வேல், ஜெயராமன் ஆகியோர் முன்னிலையில் எதிரியை எந்தவித துன்புறுத்தலும் இல்லாமல் தானாக சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் இறுதியில் தன்னை அழைத்துச் சென்றால் தன் மனைவியை காரில் வைத்து குத்தி கொலை செய்ய பயன்படுத்திய கத்தியை வீசிய இடத்தை அடையாளம் காட்டி ஆஜர் செய்வதாக கூறியுள்ளார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரி சம்பவத்தின் போது அணிந்திருந்த இரத்தக்கறை படிந்த கருப்பு கலர் பேண்ட் மற்றும் சந்தன கலர் கோடு போட்ட அரைக்கை சட்டையும் படிவம் 91-ல் காவல் நிலையத்தில் வைத்து கைப்பற்றியதாகவும், அந்த படிவம் 91 அ.சா.ஆ.22 ஆகும் என்றும், கருப்பு கலர் பேண்ட் சா.பொ.18 ஆகும் என்றும், சட்டை சா.பொ.19 ஆகும் என்றும், இயங்கும் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு தகவல் தெரிவித்து அவர் நிலையத்தில் ஆஜரானதின் பேரில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எதிரியாகிய நீர் சம்பவத்திற்கு பயன்படுத்திய பதிவு எண். டிஎன்.37 பி டபிள்யூ

WEB COPY

3340 என்ற எண்ணுள்ள நிஷான் சன்னி காரை ஆய்வகத்தின் உதவி இயக்குநர் அவர்கள் பார்வையிட்டு எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்துக்களை படிவம் 91-ல் கைப்பற்றியதாகவும், அந்த படிவம் 91 அ.சா.ஆ.23 ஆகும் என்றும், கைப்பற்றப்பட்ட கார் ஏற்கனவே சா.பொ.1 ஆகவும், இயங்கும் தடய அறிவியல் துறை உதவி இயக்குநர் திரு.முனிராசன் அவர்களால் காருக்குள்ளிருந்த தடயப் பொருட்களை படிவம் 91-ல் கைப்பற்றப்பட்டவை ஏற்கனவே சா.பொ.10 முதல் 17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் பின்னர் புகைப்பட நிபுணருக்கு புகைப்படம் எடுப்பதற்கு வருமாறு தகவல் தெரிவித்திருந்து எதிரியைஅழைத்துச் சென்று ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியவாறு கொலை செய்ய பயன்படுத்திய கத்தியை தூக்கி வீசிய இடமான திருச்சி ரோடு, ஒண்டிப்புதூர் மேம்பாலம், பட்டிணம் சர்வீஸ் ரோட்டிலுள்ள முட்புதரில் இருந்து எடுத்து ஆஜர் செய்த இரத்தக்கறை படிந்த கருப்பு கைப்பிடியுடன் கூடிய ஸ்டீல் கத்தி ஒன்றை ஆஜர் செய்ய சாட்சிகள் ஜெயராமன் மற்றும் கதிர்வேல் ஆகியோர் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றியதாகவும், அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் அந்த கத்தி ஏற்கனவே சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பின்னர் சம்பவ இடத்தை எதிரி அடையாளம் காட்ட சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவைகளை சாட்சிகள் ஆர்.பி.ராஜேந்திரன் மற்றும் வினோத் ஆகியோர்கள் முன்னிலையில் தயார் செய்து கையொப்பம் பெற்றதாகவும், தான் தயார் செய்த பார்வை மகசர் அ.சா.ஆ.24 ஆகும் என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.25 ஆகும் என்றும்

WEB COPY

பின்னர் எதிரியை நிலையம் அழைத்து வந்து தக்க பாதுகாப்பில் வைத்ததாகவும், அங்கு ஆஜரில் இருந்த புகைப்பட நிபுணர் சாட்சி முத்துவை வைத்து நான்கு கோணங்களில் புகைப்படம் எடுத்தேன் என்றும், பின்னர் கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்திருந்த இறந்து போன ஜெயசுவாசினியின் பிரேதத்தின் மீது சாட்சிகள் முன்னிலையிலும், பஞ்சாயத்தார்கள் முன்னிலையிலும் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்தேன் என்றும், அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.26 ஆகும் என்றும், அந்த இறப்பின் உண்மையான காரணம் அறியும் பொருட்டு மருத்துவ ரீதியாக பிரேத பரிசோதனை செய்ய வேண்டி கோவை மருத்துவ கல்லூரி அரசு மருத்துவமனைக்கு பெண் தலைமைக் காவலர் ஷீலா மணி மூலமாக வேண்டுகோள்கடிதம் கொடுத்தனுப்பியதாகவும், அந்த வேண்டுகோள்கடிதம் ஏற்கனவே அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பின்னர் எதிரியை வழக்குச் சொத்துக்களுடன் தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து காவலுக்கு உட்படுத்தியதாகவும், பிரேத பரிசோதனை முடித்து தனியறிக்கையுடன் பெண் காவலர் திருமதி.ஷீலாமணி ஆஜர் செய்த வழக்குச் சொத்துக்களை படிவம் 91-ல் கைப்பற்றியதாகவும், அந்த படிவம் 91 ஏற்கனவே அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இறந்த நபர் மீதிருந்து மருத்துவரால் பிரித்து எடுத்து கொடுத்து அனுப்பப்பட்ட உடைமைகள் ஏற்கனவே சா.பொ.4 முதல் 9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், உடைமைகள் அல்லாமல் அதே படிவம் 91-ல் என்னிடம் பெண் தலைமைக் காவலர் ஷீலாமணி ஒப்படைத்த இறந்த நபர் அணிந்திருந்த தங்கம் மற்றும்

WEB COPY

வெள்ளி நகைகளை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன் என்றும், நீதிமன்றத்திலிருந்து இறந்த நபரின் தகப்பனார் ஏ.பி.சண்முகம் அவர்கள் மேற்சொன்ன நகைகளை நீதிமன்ற அனுமதியுடன் பெற்றுள்ளார் என்றும், 01.10.2014-ஆம் தேதி எதிரி வீட்டின் அருகில் குடியிருக்கும் சாட்சிகள் வடிவேல் மற்றும் சிவக்குமார் தடய அறிவியல் உதவி இயக்குநர் மற்றும் ஆம்புலன்ஸ் டிரைவர் கருப்பசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், 02.10.2014-ஆம் தேதி சாட்சிகள் ப்ர்வீன் பானு உதவி ஆய்வாளர், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் மாரிமுத்து மற்றும் எஸ்.மாரிமுத்து, தலைமைக் காவலர் ரங்கநாதன், பெண் தலைமைக் காவலர் ஜீலாமணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் 09.10.2014-ஆம் தேதி இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களை பகுப்பாய்வு செய்ய வேண்டி நீதிமன்றத்தின் மூலமாக வேண்டுகோள்கடிதம் அனுப்பி வைத்ததாகவும், அந்த வேண்டுகோள்கடிதம் ஏற்கனவே அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 15.10.2014-ஆம் தேதி இவ்வழக்கின் சாட்சிகள் ஜெயராமன், கதிர்வேல், குமரேசன் ஆகியோர்களிடம் கு.வி.மு.ச பிரிவு 164-ன் படி வாக்குமூலம் பெற வேண்டி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள்கடிதம் கொடுத்ததாகவும், அந்த வேண்டுகோள்கடிதம் ஏற்கனவே அ.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கில் கைப்பற்றப்பட்ட வாகனத்தின் பதிவு சான்று நகல் வைத்து வட்டார போக்குவரத்து அலுவலருக்கு வேண்டு கோள் கடிதம் அனுப்பி வைத்தேன் என்றும், 07.11.2014-ஆம் தேதி சாட்சிகள் ஜெயராமன், கதிர்வேல் மற்றும்

WEB COPY

குமரேசன் ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 10.11.2014-ஆம் தேதி சாட்சிகள் மருத்துவர் புவனா, மருத்துவர் ஜெயசிங் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், 12.11.2014-ஆம் தேதி சாட்சிகள் திருமதி. ராஜேஸ்வரி திருமதி.ஜெயந்தி, முத்து ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் புலன்விசாரணை முடித்து 06.02.2015-ஆம் தேதி அன்று எதிரியாகிய உம்மீது சட்டப்பிரிவு 302 இதச பிரிவின் படி அரசு வழக்கறிஞர் ஒப்புதல் பெற்று, நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ததாகவும், தான் விசாரித்த சாட்சிகளில் அ.சா.2 கதிர்வேல் தன்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் அவர் எதிரியை கைது செய்யும் போது உடனிருந்ததாகவும், எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளதாகவும், எதிரியை அழைத்து சென்று மறைத்து வைத்திருந்த இடத்திலிருந்து இரத்தக்கறை படிந்த கத்தியை எடுத்து ஆஜர்படுத்தியதை சாட்சியாக கைப்பற்றுதல் மகசரில் கையொப்பமிட்டுள்ளதாகவும் கூறியுள்ளார் என்றும், அ.சா.5 சிவக்குமார் தன்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் அவர் எதிரியான உமது தகப்பனார் வீட்டிற்கு அருகில் குடியிருந்து வருவதாகவும், எதிரியை தெரியும் என்றும், 29.09.2014-ஆம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் எதிரி காரில் வந்து அவர் தகப்பனார் வீட்டிற்கு எதிரே காத்துக் கொண்டிருந்த தனது மனைவி மற்றும் குழந்தைகளை காரில் அழைத்துச் சென்றதை பார்த்ததாகவும் கூறியுள்ளார் என்றும், அ.சா.16 வினோத் தன்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சம்பவ இடம் குறித்து நான் தயார் செய்த பார்வை மகசரின் முழு விவரம் தெரியும் என்றும், அந்த பார்வை மகசரில் தானும், ஆர்.பி

WEB COPY

ராஜேந்திரன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பமிட்டோம் என்றும் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றும் கூறியுள்ளார்.

24. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு எதிராக உள்ள சங்கதிகள் குறித்து எதிரிக்கு எடுத்துரைத்து கு.வி.மு.ச.பிரிவு 313 (1)-ன் படி விசாரிக்கப்பட்டது. எதிரி தனக்கு எதிராக உள்ள சாட்சியங்களை பொய் என்று கூறியும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறியும், இது ஒரு பொய் வழக்காகும் என்றும், 29.09.2014-ஆம் தேதி தன் மனைவியுடன் காரில் சென்று கொண்டிருந்த போது, சூலூரிலுள்ள ரெஸ்டாரண்டில் சாப்பிட்டு விட்டு மனைவி சேலம் செல்ல வேண்டுமென்றும், தன்னை சிங்காநல்லூர் பஸ்ஸ்டாண்டில் இறக்கி விடும்படி சொன்னதாகவும், அவ்வாறு செல்லும் போது தன் குடும்பத்திலிருந்து சொத்தை பிரித்துக் கொண்டு வந்துவிடும்படியும், தவறினால் தன் வாழ்க்கையை முடித்துக் கொள்வதாக சொல்லி தன் மனைவி மிரட்டினார் என்றும், தன் குடும்பத்தை விட்டு தான் பிரிந்து வர தயாராக இல்லை என்று சொல்லியதால் தன் மனைவி கத்தியை எடுத்து தானே குத்திக் கொள்வேன் என்று மிரட்டியதாகவும், அவரையும் பார்த்துக் கொண்டு, காரையும் ஓட்டிக் கொண்டு வரும் போது இரவு நேரத்தில் வழியில் வேகத்தடை இருந்ததை கவனிக்காமல் அதன் மீது ஏறியதால் தன் மனைவி கையில் இருந்த கத்தி அவருடைய கழுத்தில் குத்துப் பட்டு விட்டது என்றும், அதிக ரத்தம் வெளியாகியது என்றும், மனைவியின் கையை பிடித்து பார்த்த போது மனைவி இறந்துவிட்டார் என்பது தெரிய வந்தது என்றும், உடனே தகவல் தெரிவிக்க நள்ளிரவு 1.30 மணியளவில் தன் மனைவியின் சடலத்துடன்

WEB COPY

காவல்நிலையம் சென்று தகவல் தெரிவித்ததாகவும், காலை 6.00 மணிக்கு வந்த காவல்துறை அதிகாரிகள் தன் மனைவியின் தற்செயல் இறப்பை கொலை வழக்காக மாற்றி விட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை பின்வருமாறு:-

எதிரி மீதான இ.த.ச.பிரிவு 302-ன் கீழான தண்டிக்கத்தக்க குற்றத்திற்கான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?

**<u>தீர்வு :-</u>**

WEB COPY

25. இந்த வழக்கில் அரசு தரப்பில் 20 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு 26 சான்றாவணங்களும் 19 சான்று பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகளோ, சான்று பொருட்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. எதிரி தரப்பில் 1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 302 -ன் கீழான குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

26. அரசு தரப்பில் வாதிடும் போது அரசு தரப்பில் 20 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 26 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும், 19 சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும், இந்த வழக்கில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளவர் காவல் துறையைச் சேர்ந்த ஆய்வாளர் என்றும், மேற்படி அ.சா.1 அளித்த புகாரின் அடிப்படையில் தான் இந்த வழக்கு

பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், சம்பவ இடத்தில் எதிரியை சாட்சிகள் கதிர்வேல் மற்றும் ஜெயராமன் ஆகியோர் முன்னிலையில் பிடித்தது குறித்தும், அவ்வாறு பிடித்து எதிரியையும், எதிரி ஓட்டி வந்த காரையும் சிங்காநல்லூர் காவல்நிலையத்தில் ஒப்படைத்தது குறித்தும் காயம்பட்ட எதிரியின் மனைவி ஜெயசுவாசினியை அரசு மருத்துவமனைக்கு அனுப்பியது குறித்தும், அரசு மருத்துவமனையிலிருந்து மேற்படி ஜெயசுவாசினி இறந்து விட்ட செய்தி கிடைத்தது குறித்தும், தெளிவாகவும், கோர்வையாகவும் அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அ.சா.2, 3 ஆகியோர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அதனடிப்படையில் கைப்பற்றப்பட்ட கத்தி குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், அ.சா.4 குமரேசன் இறந்து போன ஜெயசுவாசினியையும், அவரது இரண்டு குழந்தைகளையும் சேலத்திலிருந்து கோவைக்கு அழைத்து வந்தது குறித்தும், எதிரியிடம் அவர் மனைவியையும், குழந்தைகளை ஒப்படைத்தது குறித்தும், தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அ.சா.6 எதிரியின் மாமனார் ஏ.பி.சண்முகம் எதிரிக்கும், அவர் மனைவிக்கும் இடையே இருந்த பிரச்சினை குறித்தும், பின்னிட்டு எதிரியின் மனைவியான தன் மகளே எதிரியின் வீட்டிற்கு செல்வதாக சொன்னதன் அடிப்படையில் தான் அ.சா.4 குமரேசனுடன் அனுப்பி வைத்தது குறித்து தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அ.சா.7 முதல்நிலைக்காவலர் ரங்கநாதன் அ.சா.1 தகவல் தெரிவித்ததன் அடிப்படையில் தான் சம்பவ இடம் வந்தது குறித்தும், காயம்பட்டிருந்த ஜெயசுவாசினியை மருத்துவமனைக்கு அழைத்து சென்றது குறித்தும், அங்கு மருத்துவர் பரிசோதித்து விட்டு வரும் வழியிலேயே அந்த பெண் இறந்து விட்டார் என்று தெளிவாக சாட்சியம்

WEB COPY

அளித்துள்ளார் என்றும், அ.சா.8 வடிவேல் எதிரியுடன், அவர் மனைவியும் குழந்தைகளும் 29.09.2014-ஆம் தேதி இரவு 11.00 மணியளவில் காரில் ஏறிச் சென்றதை பார்த்ததாக சொல்லியுள்ளார் என்றும், அ.சா.9 ஜீலாமணி பிரேத பரிசோதனைக்காக ஜெயசுவாசினியின் சடலத்தை அரசு மருத்தவமனையில் வேண்டுகோளுடன் பிரேதத்தை ஒப்படைத்ததாகவும், பிரேதத்திலிருந்த உடைமைகளை மருத்தவரிடமிருந்து பெற்று தனியறிக்கையுடன் ஆய்வாளரிடம் ஒப்படைத்தது பற்றி கூறியுள்ளார் என்றும், அ.சா.10 தடயப் பொருட்களை ஆய்வு செய்து அறிக்கை கொடுத்துள்ளது பற்றியும், அ.சா.11 டாக்டர் புவனா மேற்படி ஜெயசுவாசினி அரசு மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்ட போதே இறந்திருந்தார் என்று சான்றிதழ் கொடுத்ததாகவும், அ.சா.12 டாக்டர்.ஜெயசிங் சா.பொ.3 கத்தியினால் இறந்த பெண்மணிக்கு காயம் ஏற்படுத்தி அதன் மூலம் இறப்பை ஏற்படுத்தியிருக்க முடியும் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.13 மாரிமுத்து தன் சாட்சியத்தில் அ.சா.1 தன்னை தொடர்பு கொண்டது குறித்தும், அதனடிப்படையில் ஆம்புலன்ஸ் அனுப்பியது குறித்தும் சொல்லியுள்ளார் என்றும், அ.சா.14 கே.மாரிமுத்து தான் இரவுப் பணியிலிருந்த போது அ.சா.1 தன்னை தணிக்கை செய்தது பற்றி கூறியுள்ளார் என்றும், அ.சா.17 பர்வீன்பானு அ.சா.1-டம் புகார் பெற்றது குறித்தும், அதனடிப்படையில் அ.சா.ஆ.15 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அ.சா.18 தடய அறிவியல் அலுவலர் தடயப் பொருட்களை பகுப்பாய்வு செய்தது குறித்தும், அ.சா.19 சார்பு நீதிபதி தன் சாட்சியத்தில் தான் நீதித்துறை நடுவராக இருந்த போது கு.வி.மு.ச.பிரிவு 164-ன் படி சாட்சிகளிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்தது

WEB COPY

குறித்து கூறியுள்ளார் என்றும், அ.சா.20 புலன் விசாரணை அதிகாரி தன் சாட்சியத்தில் புலன் விசாரணை குறித்து தெளிவாகவும், கோர்வையாகவும் சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே அரசு தரப்பில் எதிரிக்கெதிரான குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு அதிக பட்ச தண்டனை வழங்கவேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

27. எதிரி தரப்பில் வாதிடும் போது இந்த வழக்கில் குற்ற நோக்கு மெய்ப்பிக்கப்படவில்லையென்றும், அ.சா.1 உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அ.சா.1-ன் சாட்சியம் இயல்பாக இல்லையென்றும், உண்மையில் அ.சா.1 சொல்வது போல் சம்பவம் ஏற்பட்டிருந்தால் பெண்ணின் உயிரை காப்பாற்ற தான் நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றும், ஆனால் அவ்வாறு உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ளதை பார்க்கும் போது அ.சா.1 சொல்வது போல சம்பவம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றும், குற்றச்சாட்டில் சொல்லப்பட்டுள்ள குற்ற நோக்கிற்கும், அ.சா.4 மற்றும் 6 ஆகியோர்களின் சாட்சியத்திற்கும் மிகுந்த வேறுபாடுகள் காணப்படுகின்றன என்றும், மேற்படியார்கள் குற்ற நோக்கு பற்றி கூறவில்லையென்றும், குற்ற நோக்கை மெய்ப்பிக்கும் விதமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லையென்றும், சா.பொ.3 கத்தி கைப்பற்றப்பட்டது குறித்து, தனிப்பட்ட சாட்சிகள் யாரும் இந்த நீதிமன்றத்தில் அரசு தரப்பு வழக்கை சார்ந்து சாட்சியம் அளிக்கவில்லையென்றும், இறுதியாக ஜெயசுவாசினி மற்றும் அவரது குழந்தைகளை காரில் ஏற்றி விட்டதாக சொல்லும் சாட்சிகள் சிவக்குமார் மற்றும் வடிவேல் ஆகியோர்கள் தெளிவாக

WEB COPY

சாட்சியம் அளிக்கவில்லையென்றும், அ.சா.12 டாக்டர்.ஜெயசிங் அறிக்கை முழுமையான அறிக்கை அல்ல என்றும், அ.சா.17 பர்வீன்பானுவின் சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றும், அ.சா.20 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை சார்ந்து இல்லையென்றும், உண்மையில் எதிரியும், அவர் மனைவியும் காரில் வரும் பொழுது எதிரியின் மனைவி சா.பொ.3 கத்தியை வைத்து தானே முடிவை தேடிக் கொள்வதாக எதிரியை பயமுறுத்தி கொண்டு வந்தார் என்றும், இந்த சூழ்நிலையில் வேகத்தடையின் மீது கார் ஏறி இறங்கும் போது சா.பொ.3 கத்தி ஜெயசுவாசினியின் கழுத்தில் எதிர்பாராமல் குத்தி விட்டது என்றும், இதற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றும், எனவே சந்தேகத்தின் நற்பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிடப்பட்டது.

28. இந்த வழக்கில் 20 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 26 சான்றாவணங்களும், 19 சான்று பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கில் அ.சா.1 ஜோதி, சரவணம்பட்டி காவல் ஆய்வாளர் ஆகும். அவர் 29.09.2014-ஆம் தேதி இரவு ரோந்துப்பணியிலிருந்த போது மறுநாள் காலை 3.30 மணிக்கு ஒண்டிப்புதூர் சோதனை சாவடிக்கு சென்று தணிக்கை செய்து விட்டு திரும்பி வரும் போது ஒண்டிப்புதூர் மேம்பாலத்திற்கு முன்பு அதன் இறக்கத்தில் பட்டிணம் சர்வீஸ் ரோட்டில் சா.பொ.1 கார் நின்று கொண்டிருந்ததாகவும், அதனருகில் சென்று பார்த்த போது அதிலிருந்த எதிரி தப்பி ஓட முயற்சி செய்தார் என்றும், அவரை எதிரில் வந்த இரு நபர்களுடன் சேர்ந்து துரத்தி

WEB COPY

பிடித்ததாகவும், காரை வந்து பார்த்த போது காரின் முன்புற இடது சீட்டில் ஒரு பெண் இரத்தக்காயத்துடன் உயிருக்கு போராடி கொண்டு இருந்தார் என்றும் கூறியுள்ளார். ஒயர்லெஸ் மூலம் சிங்காநல்லூர் காவல்நிலையத்திற்கு தொடர்பு கொண்டு ஆம்புலன்ஸ் அனுப்ப சொன்னதாகவும், அந்த ஏரியாவில் ரோந்தில் இருந்த காவலர் 758 ரங்கநாதன் என்பவரை ஒயர்லெஸ் மூலம் தொடர்பு கொண்டு சம்பவ இடத்திற்கு வரச்சொல்லி, ஆம்புலன்ஸ் வந்ததும் காயத்துடன் இருந்த ஜெயசுவாசினியை ஆம்புலன்சில் ஏற்றி துணையாக மேற்படி காவலரையும் ஆம்புலன்சில் ஏற்றி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி விட்டு எதிரியை விசாரித்ததாகவும் கூறியுள்ளார். அ.சா.1 30.09.2014-ஆம் தேதி சிங்காநல்லூர் உதவி ஆய்வாளர் திருமதி.பர்வீன்பானு என்பவரிடம் எதிரியையும், வாகனத்தையும் ஆஜர்படுத்தியதாகவும், இதற்கிடையில் மேற்படி ஜெயசுவாசினி காலமாகிவிட்டார் என்றும், முதல் நிலைக் காவலர் ரங்கநாதன் தெரிவித்தார் என்றும், தான் கொடுத்த தனியறிக்கை அ.சா.ஆ.1 ஆகும் என்றும் கூறியுள்ளார். சா.பொ.1 காரின் புகைப்படங்கள், சா.பொ.2-ன் தொடராகும் என்று கூறியுள்ளார். அவர் தன் சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில் புகார் சிங்காநல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் பெயருக்கு கொடுப்பதாக தான் எழுதியுள்ளதாகவும், ஆனால் தான் காவல்நிலையம் சென்ற போது ஆய்வாளர் காவல்நிலையத்தில் இல்லை என்றும் கூறியுள்ளார். இவ்வாறிருக்கையில் புகாரில் அ.சா.1 ஏன் உதவி ஆய்வாளர் என்று பெயரிடாமல், ஆய்வாளர் என்று பெயரிட்டு கொடுத்தார் என்பதற்கு அ.சா.1 கொடுத்த விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. அதாவது ஆய்வாளர் இருப்பார் என்ற எண்ணத்தில் எழுதியதாக அ.சா.1 கூறியிருப்பது

WEB COPY

ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. அ.சா.1 ஒரு காவல் ஆய்வாளராக இருந்துள்ள நிலையில், சிங்காநல்லூர் காவல் நிலையத்திற்கு எதிரியுடனும், காருடனும் சென்றதாக சொல்லியுள்ள அ.சா.1 காவல் நிலையத்தில் எந்த அதிகாரி பணியில் இருக்கிறார் என்பதை கூட கவனிக்காமல் ஆய்வாளர் இருப்பார் என்ற எண்ணத்தில் புகார் எழுதியதாக சொல்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. மேலும், புகார் எழுதிக் கொண்டிருக்கும் போதே ஆய்வாளர் காவல்நிலையத்தில் இல்லை என்பதை தெரிந்து கொண்டதாகவும், அ.சா.1 கூறியுள்ள சூழ்நிலையில் ஏன் புகாரை உதவி ஆய்வாளரின் பெயரிட்டு கொடுக்கவில்லையென்பதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் கூறப்படவில்லை. மேலும், கொலை சம்பவம் என்று தெரிந்தும் கூட ஏன் எதிரியை கைது செய்யவில்லையென்பதற்கும் உடனடியாக ரோந்துப் பணியிலிருந்த உதவி ஆணையருக்கு ஏன் தகவல் தெரிவிக்கவில்லையென்பதற்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் எதுவும், அ.சா.1 குறிப்பிடவில்லை. அ.சா.1 தான் சிங்காநல்லூர் காவல்நிலையத்தில் இருந்தவரை உதவி ஆணையர் அங்கு வரவில்லையென்றும் கூறியுள்ளார். ஆனால் அ.சா.20 புலன்விசாரணை அதிகாரி தன் சாட்சியத்தில் தங்கள் காவல்நிலைய உதவி ஆணையர் திரு.பாஸ்கரன் அவர்கள் தங்கள் காவல் நிலையத்திற்கு காலை 5.45 மணிக்கு வந்தார் என்றும், தங்கள் உதவி ஆணையர் திரு.பாஸ்கரன் அப்போது காவல்நிலையத்திலிருந்த அ.சா.1 ஜோதியை அழைத்து என்ன நடந்தது என்று விசாரித்தார் என்றும் கூறியுள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.20 ஆகிய இருவருமே காவல்துறை ஆய்வாளர்களாக இருந்துள்ள சூழ்நிலையில்

WEB COPY

ஒருவருக்கொருவர் முற்றிலும் மாறுபட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பது தெரிகிறது. மேலும், அ.சா.1 பயணம் செய்த வாகனம் டி.என்.66 ஜி. 0635 சம்பந்தப்பட்ட வாகன போக்குவரத்து டைரி எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேற்படி டைரியை பார்த்தால் மேற்படி வாகனம் குறிப்பிட்ட நாளில் எங்கெங்கு சென்றுள்ளது என்பதும், எத்தனை கிலோ மீட்டர் சென்றுள்ளது என்பதும் தெரிந்து கொள்ள முடியும் என்றும், அ.சா.1 சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் ஏன் அந்த டைரி தாக்கல் செய்யப்படவில்லை என்பதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை. அ.சா.20 புலன் விசாரணை அதிகாரியும் மேற்படி டைரி குறித்து விசாரணை எதுவும் மேற்கொள்ளவில்லை. அரை கிலோ மீட்டர் தூரம் ஓடிச் சென்று எதிரியை பிடித்ததாக அ.சா.1 கூறியுள்ளார். ஏன் காவல் வாகனத்திலேயே சென்று எதிரியை பிடிக்க ஆய்வாளர் முயற்சிக்கவில்லையென்பதற்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை. எதிரியை பிடித்த இடத்திலேயே, எதிரியிடம் விசாரித்த போது எதிரி கத்தியால் குத்தியதாக கூறியுள்ள சூழ்நிலையில் மேற்படி கத்தியை எங்கே என்று எதிரியிடம் கேட்டு அதை கைப்பற்றவும் அ.சா.1 முயற்சிக்கவில்லை. அதற்காக அ.சா.1 கூறும் காரணம் குத்துப்பட்டவரின் உயிரை காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை இருந்ததால் கத்தியை பற்றி விசாரிக்கவில்லை என்று கூறியிருப்பது எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. மேற்படி பெண்ணின் உயிரை காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையை முக்கியமாக அ.சா.1 உண்மையில் கருதியிருந்தால் ஏன் சம்பவ இடத்திற்கு மிகவும் அருகாமையில் உள்ள மருத்துவமனையின் உதவியை நாடாமல் சுமார் 9 கிலோ மீட்டர் தூரம்

WEB COPY

உள்ள அரசு மருத்துவமனைக்கு ஏன் ஜெயசுவாசினியை அனுப்பி வைத்தார் என்பதற்கும், ஏன் 108 ஆம்புலன்ஸ் உதவியை நாடாமல் காவல் நிலையத்திற்கு போன் செய்து ஆம்புலன்சை வரவழைக்க முயற்சித்தார் என்பதற்கும் எந்தவொரு விளக்கமும் இல்லை. மேலும், சம்பவ இடத்திற்கு 1 1/2 கிலோ மீட்டர் தூரத்தில் சரஸ்வதி மருத்துவமனை உள்ளது என்றும், 2 கிலோமீட்டர் தூரத்தில் சாந்தி சோஷியல் சர்வீஸ் மருத்துவமனை உள்ளது என்றும், அரசு மருத்துவமனை 9 கிலோ மீட்டர் தூரம் தள்ளியுள்ளது என்றும், அ.சா.7 முதல் நிலைக் காவலர் ரங்கநாதன் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, உயிருடன் போராடி கொண்டிருந்ததாக சொல்லப்படும் ஜெயசுவாசினியை உண்மையில் காப்பாற்றுவதற்காக அ.சா.1 உடனடியாக மருத்துவ உதவி அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் செயல்படவில்லையென்பதே அவருடைய சாட்சியத்திலிருந்து தெளிவாக தெரிகிறது. 108 ஆம்புலன்சுக்கு தான் போன் செய்ததாக அ.சா.1 தன் சாட்சியத்தில் கூறியிருந்தாலும் கூட அதை குறித்து தன்னுடைய தனி அறிக்கையிலோ அல்லது புலன் விசாரணை அதிகாரி தன்னை விசாரித்த போதோ சொல்லவில்லை என்று கூறியிருப்பதை பார்க்கும் போது உண்மையில் அ.சா.1, 108 ஆம்புலன்சுக்கு போன் செய்திருப்பதாக கூறுவதில் உண்மை இல்லையென்றே தெரிகிறது. மேலும், சம்பவ இடத்திலிருந்து தான் ஒயர்லெஸ்ஸில் பேசியது அந்த நேரத்தில் ரோந்துப் பணியிலிருந்த, அந்த பணியிலிருந்த அனைத்து காவல் அதிகாரிகளுக்கும் தெரிந்திருக்குமா என்றால் தெரிந்திருக்கும் என்றும், துணை ஆணையர் மற்றும் ஆணையருக்கு தாம் ஒயர்லெஸ்ஸில் பேசியது கேட்டிருக்க வாய்ப்பில்லையென்றும், அவர்கள் ஆஃப் செய்து வைத்திருப்பார்கள் என்றும்,

WEB COPY

மேற்படி அதிகாரிகளுக்கு கிடைத்திருக்குமா, கிடைத்திருக்காதா என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஒயர்லெஸ் என்பது எப்போதும் அதாவது 24 மணி நேரமும் இயக்கத்தில் இருக்கக் கூடிய ஒரு சாதனமாகும். பிரத்யேகமாக காவல்துறையினருக்காக அரசால் வழங்கப்பட்ட ஒரு சாதனமாகும். மேற்படி சாதனம் ஆஃப் செய்து வைத்திருப்பார்கள் என்று அ.சா.1 கூறுவது வருந்தத்தக்கதாகவும் உள்ளது. இதே சங்கதியை குறித்து அ.சா.17 திருமதி.பர்வீன்பானு உதவி ஆய்வாளர் தன் சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில் ஒயர்லெஸ் கருவி தன்னிடமும் உண்டு என்றும், எந்த ஒரு அதிகாரி ஒயர்லெஸ் கருவி மூலம் யாருடன் தொடர்பு கொண்டாலும் மேற்படி தகவலை ஒயர்லெஸ் கருவி வைத்துள்ள ஒவ்வொரு காவல் அதிகாரியும் கேட்க முடியுமென்றும், ஓய்வில் தூங்கிக் கொண்டிருக்கும் அதிகாரிகள் கேட்க முடியாது என்றும், ஓய்வில் தூங்கிக் கொண்டிருக்கும் போது ஓய்விற்கோ, தூக்கத்திற்கோ தொந்தரவு ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக ஒயர்லெஸ் சத்தத்தை குறைத்து வைத்துக் கொள்வோம் என்றும், ஆனால் அவ்வாறு எல்லாரும் வைத்துக் கொள்ள மாட்டார்கள் என்றும், உதவி ஆணையர், துணை ஆணையர், ஆணையர் ஆகியோர்களை பொறுத்து ஒயர்லெஸ்ஸின் சத்தத்தை குறைக்க மாட்டார்கள் என்றும், ஏனெனில் அதை கவனித்துக் கொள்ள தனியாக ஒரு அலுவலர் உள்ளார் என்றும், எனவே ஒயர்லெஸ் தகவலை பொறுத்து எந்த அதிகாரி வேறு எந்த அதிகாரியுடன் பேசினாலும், உடனடியாக உதவி ஆணையர், துணை ஆணையர், ஆணையர் ஆகியோர்களுக்கு தெரிந்து விடும் என்றும் கூறியுள்ளார். மேலும், சம்பவ தினம் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சண்முகம் தான் இரவு ரோந்துப் பணிக்கு

WEB COPY

சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் நியமிக்கப்பட்டவராகும் என்று கூறியுள்ளார். மேற்படி சண்முகத்தை அ.சா.1 ஏன் உடனடியாக அழைக்கவில்லையென்பதற்கும் எந்தவொரு காரணமும் அ.சா.1 முன்னிலைப்படுத்தவில்லை. சம்பவ இடத்தில் வெளிச்சம் இல்லை என்பதும் அ.சா.1 மற்றும் 20 ஆகிய இருவருமே ஒப்புக்கொண்டுள்ளார்கள். அ.சா.1 தன் சாட்சியத்தில் தானும், எதிரியும் தன்னுடைய வாகனத்தில் காவல் நிலையம் வந்துவிட்டு மீண்டும் தன்னுடைய ஓட்டுனர் சம்பவ இடம் வந்து சிங்காநல்லூர் காவல்நிலையத்திற்கு சா.பொ.1 காரை எடுத்து வந்ததாக சொல்லியுள்ளார். ஆனால் அவருடைய கு.வி.மு.ச. பிரிவு 161 (3)-ன் படியான வாக்குமூலத்தில் "பின்னர் சந்தோஷ்குமாரையும், அவர் ஓட்டி வந்த டி.என்.37 பி டபிள்யூ 3340 நிஷான் சன்னி என்ற காரை சிங்காநல்லூர் காவல்நிலையத்திற்கு கொண்டு வந்தேன், அப்போது சி.எம்.சி மருத்துவமனைக்கு ஜெயசுவாசினியுடன் ஆம்புலன்சில் சென்ற மு.நி.கா 758 திரு.ரங்கநாதன் என்பவர் தன்னை தொடர்பு கொண்டு கத்தி குத்துப் பட்ட ஜெயசுவாசினியை டாக்டர் பரிசோதித்து பார்த்து விட்டு அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக கூறியதாகவும்" என்று கூறியுள்ளார். அ.சா.1, புலன் விசாரணை அதிகாரியிடம் கொடுத்த வாக்குமூலத்திற்கும், நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்திற்கும் முரண்பாடு உள்ளது என்பது தெளிவாக தெரிகிறது. மேலும், சம்பவ இடத்திற்கு வந்த ஆம்புலன்ஸ் சிங்காநல்லூர் காவல்நிலையத்திற்கு அருகில் உள்ள என்.ஜி. மருத்துவமனை ஆம்புலன்ஸ் தானா என்று தான் சரியாக பார்க்கவில்லை என்றும் கூறியுள்ளார். எனவே மேலே விவரித்துள்ள வகையில் அ.சா.1-ன்

WEB COPY

சாட்சியத்திற்கு இந்த வழக்கை பொறுத்தமட்டில் எந்த ஒரு முக்கியத்துவமும் கொடுக்க முடியாத சூழ்நிலை தான் உள்ளது.

29. அ.சா.2 கதிர்வேல் தன் சாட்சியத்தில் சா.பொ.3 கத்தி கைப்பற்றியதற்காக சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் வைத்து தானும், ஜெயராமனும் கையெழுத்து போட்டதாக சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார். மேலும், இவர் சம்பவ இடத்தில் அ.சா.1-டம் எதிரியை பிடிக்க உதவி செய்தவராக காண்பிக்கப்பட்ட சாட்சியாகும். ஆனால் இவர் தன் சாட்சியத்தில் மேற்படி காரை அடையாளம் காட்ட முடியுமா என்று நீதிமன்றத்தில் கேட்ட போது ஞாபகமில்லையென்றும், கார் எண் மட்டும் 3340 என்றும் கூறியுள்ளார். தானும், ஜெயராமனும் அன்றே காலை 4.00 மணிக்கு சிங்காநல்லூர் காவல்நிலையம் சென்றதாகவும் அ.சா.1 சரவணம்பட்டி ஆய்வாளர் எழுதிக் கொண்டிருந்ததை பார்த்ததாகவும், சரவணம்பட்டி ஆய்வாளர் 4.30 மணிக்கு ஸ்டேஷனை விட்டு போன பிறகு சிங்காநல்லூர் ஆய்வாளர் காலை 5.15 மணிக்கு வந்து சந்தோஷ்குமாரை விசாரித்து அதை எழுதிக் கொண்டு தன்னிடமும், ஜெயராமனிடமும் கையெழுத்து செய்ய முடியுமா என்று கேட்டு, கையெழுத்து வாங்கினார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அதன் பிறகு சந்தோஷ்குமாருடன் காலை 8.00 மணி முதல் 8.30 மணிக்குள் தானும், ஜெயராமனும் சிங்காநல்லூர் ஆய்வாளர் செந்தில் மணல் லாரி ஆபிஸ்க்கு அருகே சென்றதாகவும், அங்கிருந்து சந்தோஷ்குமார் கத்தியை எடுத்து ஆஜர் செய்ததாகவும் கூறியுள்ளார். ஆனால் அதற்கான மகசரில் காவல்நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்ததாக

WEB COPY

கூறியுள்ளார். இவருடைய சாட்சியம், அ.சா.1 சாட்சியத்திற்கு முரண்பட்டு உள்ளது. அதாவது, ஜெயராமன் மற்றும் கதிர்வேல் ஆகியோர் தம்முடன் காலை 3.30 மணியிலிருந்து 3.40 மணி வரை இருந்தார்கள் என்றும், பிறகு அவர்கள் வந்த இருசக்கர வாகனத்திலேயே சென்று விட்டார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.2 சிங்காநல்லூர் காவல்நிலையம் வந்ததாக கூறியுள்ளார். மேலும் காலை 5.00 மணிக்கு புகார் கொடுத்ததாக அ.சா.1 கூறியுள்ளார். ஆனால் 4.30 மணிக்கே சரவணம்பட்டி ஆய்வாளர் காவல்நிலையத்திலிருந்து சென்று விட்டதாக அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார். இவரது சாட்சியத்திற்கு எந்த முக்கியத்துவமும் கொடுக்க முடியாது என்பது தெரிகிறது.

WEB COPY

30. அ.சா.3 ஜெயராமன், அ.சா.2 கதிர்வேலுடன் வந்த நபராகும். அ.நா.3-ன் சாட்சியத்தை பார்க்கும் போது சரவணம்பட்டி ஆய்வாளர், சிங்காநல்லூர் காவல் நிலையத்திற்குள் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார் என்றும், காலை 5.00 மணியளவில் எதிரியின் மனைவி இறந்துவிட்டார் என்ற தகவலை எதிரியின் மனைவியுடன் சென்ற முதல் நிலைக் காவலர் சிங்காநல்லூர் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னார் என்றும், சிங்காநல்லூர் உதவி ஆய்வாளர் ஆய்வாளரை வரச்சொல்லி தகவல் கொடுத்தார் என்றும், 5.30 மணிக்கு சிங்காநல்லூர் ஆய்வாளர் வந்து விட்டார் என்றும், எதிரி கொடுத்த வாக்குமூலத்தை தான் படிக்கவில்லையென்றும், கடைசியாக என்ன எழுதப்பட்டிருந்தது என்று தெரியவில்லையென்றும், சந்தோஷ்குமார் அடையாளம் காட்டி செந்தில் மணல் டிப்போ காம்பவுண்ட் முட்புதரிலிருந்து

சந்தோஷ்குமார் கத்தியை ஆய்வாளரிடம் எடுத்துக் கொடுத்தார் என்றும், தான் அதே இடத்தில் அ.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகசரில் கையெழுத்திட்டதாகவும் கூறியுள்ளார். அவரே தன் சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில் போலீசாரிடம் தான் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லையென்றும், எதிரியை பிடித்த பிறகு காருக்கு அருகே தாங்களும், ஆய்வாளர், எதிரி ஆகியோரும் சுமார் 3/4 மணி நேரம் காருக்கு அருகே நின்றதாகவும், அந்த 3/4 மணி நேரமும் எதிரியின் மனைவி காருக்குள் மயக்க நிலையிலேயே இருந்தார் என்றும், சரவணம்பட்டி ஆய்வாளர் புகார் எழுதி சிங்காநல்லூர் காவல் நிலையத்திலிருந்த ஆண் உதவியாளரிடம் தான் கொடுத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.2, 3 ஆகிய சாட்சிகள் இருவரையும் அ.சா.1 ஜோதி தான் சிங்காநல்லூர் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்ததாக அ.சா.20 புலன் விசாரணை அதிகாரி தன் சாட்சியத்தில் கூறியுள்ளார். மேலும், மேற்படி சாட்சிகள் இருவரையும் தான் விசாரிக்க வேண்டும் என்பதற்காக அ.சா.1 ஜோதி காவல் நிலையம் அழைத்து வந்ததாக புலன் விசாரணை அதிகாரி கூறியுள்ளார். அ.சா.1-ன் சாட்சியமும், அ.சா.2, 3 ஆகியோரின் சாட்சியமும், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு காணப்படுகின்றன. தன்னுடன் காலை 3.40 மணி வரை இருந்து விட்டு அ.சா.2, 3 ஆகியோர் தங்கள் இரு சக்கர வாகனங்களில் சென்று விட்டதாக கூறியுள்ளார். ஆனால் புலன் விசாரணை அதிகாரி அ.சா.2, 3 ஆகியோர்களை தான் விசாரிக்க வேண்டுமென்பதற்காக அ.சா.1 ஜோதி தான் சிங்காநல்லூர் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்ததாக கூறியுள்ளார். அ.சா.2, 3 ஆகியோர்களோ தாங்களாகவே வந்ததாக

WEB COPY

கூறியுள்ளார்கள். எனவே, அ.சா.2, 3 சாட்சியங்களுக்கு எந்தவிதமான முக்கியத்துவமும் கொடுக்க முடியாது என்பது தெரிகிறது. அ.சா.4 இறந்த ஜெயசுவாசினியின் ஒன்று விட்ட சகோதரராகும். அ.சா.6 சண்முகம் இறந்த ஜெயசுவாசினியின் தந்தையாகும். அ.சா.4 குமரேசன் தன் சாட்சியத்தில் 29.09.2014-ஆம் தேதி பகல் 3.00 மணி முதல் 3.30 மணிக்குள் தன் பெரியப்பா அ.சா.6 தனக்கு போன் செய்து தன் மகள் ஜெயசுவாசினியை மருமகன் சந்தோஷ்குமாருடன் பிழைக்க போகிறது என்றும், கொண்டு போய் கோயமுத்தூரில் மருமகன் வீட்டில் விட்டு வரும்படி சொன்னதின் அடிப்படையில் தான், ஜெயசுவாசினி மற்றும் அவரது இரண்டு குழந்தைகளுடன் கோவை வந்து அன்று இரவு சுமார் 10.00 மணியிலிருந்து 10.30 மணிக்குள்ளாக எதிரி காரில் வந்து ஜெயசுவாசினியையும், இரு குழந்தைகளையும் காரில் ஏற்றிக் கொண்டு சென்று விட்டதாக கூறியுள்ளார். மேற்படி அ.சா4 குமரேசனுடன் தன் மகளையும், மகளின் குழந்தைகளையும், மகளின் விருப்பப்படி தான், தான் அனுப்பி வைத்ததாக அ.சா.6 சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 மற்றும் அ.சா.6 ஆகியோரின் சாட்சியத்தை பார்க்கும் போது இறந்து போன ஜெயசுவாசினி தாமாகவே தான் அதாவது 29.09.2014-ஆம் தேதி தன் கணவருடன் சேர்ந்து வாழ்வதாக சொல்லி விட்டு சேலத்திலிருந்து புறப்பட்டு வந்ததாக அ.சா.6 சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 மற்றும் 6 ஆகியோரது சாட்சியத்தை பார்க்கும் போது இறந்து போன ஜெயசுவாசினி தன்னிச்சையாக தான் விருப்பப்பட்டு குழந்தைகளுடன் கோவை வந்துள்ளார் என்பது தெரிகிறது. ஆனால் குற்றப் பத்திரிக்கையில் 29.09.2014-ஆம் தேதி எதிரி தனது மனைவி ஜெயசுவாசினியை தொடர்பு கொண்டு

WEB COPY

சேர்ந்து வாழலாம் என்று ஆசை வார்த்தைகள் கூறி கோவை வரச்சொன்னதாக கூறப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.6 அந்த சங்கதி பற்றி எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. அ.சா.6 தன் சாட்சியத்தில் 29.09.2014-ஆம் தேதி திங்கட்கிழமை சமாதானபடுத்தி கோவை வருவதாக இருந்தது என்றும், ஆனால் மாப்பிள்ளை வீட்டார் வேண்டாமென்று சொல்லிவிட்டதாக தகவல் வந்ததாக தன் மகளிடம் தான் சொன்னதாகவும், ஆனால் தன் மகள் கேட்காமல் ஒரு முறை தன் கணவரை பார்த்து நேரடியாக பேசி விட்டு வருவதாக சொன்னதால் அ.சா.4 குமரேசனுடன், ஜெயசுவாசினியையும், குழந்தைகளையும் அனுப்பி வைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இந்த சங்கதி குற்ற அறிக்கையில் சொல்லியுள்ள சங்கதிக்கு நேர் மாறாக உள்ளது. மேலும், மறுநாள் காலை 5.00 மணிக்கு தன் பெரியப்பா தனக்கு போன் செய்து ஜெயசுவாசினியை எதிரி கத்தியால் குத்தி விட்டதாகவும், கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாகவும், போய் பார்த்துவிட்டு வரலாம் என்றும் கூறியதாக சாட்சியம் அளித்தள்ளார். மேலும் கோவை சிங்காநல்லூர் காவல் நிலையத்திலிருந்து தன் பெரியப்பாவுக்கு அவருடைய மொபைல் போன் மூலமாக தகவல் வந்ததாகவும் கூறியுள்ளார். ஆனால் அ.சா.6 தன் சாட்சியத்தில் 30.09.2014-ஆம் தேதி அதிகாலை 5.30 மணியிலிருந்து 6.00 மணிக்குள்ளாக கோவை சிங்காநல்லூர் காவல்நிலையத்திலிருந்து போலீசார் அவரை தொடர்பு கொண்டு ஜெயசுவாசினியை அவர் கணவர் கத்தியால் குத்தி ஜெயசுவாசினி இறந்து விட்டதாக தகவல் வந்ததாக கூறியுள்ளார். மேற்படி அ.சா.4 மற்றும் அ.சா.6 சாட்சியங்களுக்குள் முரண்பாடுகள் காணப்படுகின்றன. மேலும், பஞ்சாயத்து

WEB COPY

நடந்ததாக அ.சா.6 சொல்லியிருந்தாலும் கூட அவர்களில் யார் ஒருவரையும் இந்த நீதிமன்றத்தில் விசாரிக்கவில்லை. எனவே, எதிரிக்கும், இறந்து போன அவர் மனைவி ஜெயசுவாசினிக்கும் இடையே எந்தவிதமான பிரச்சனைகள் ஏற்பட்டன என்பது குறித்தும், எந்தவிதமான பஞ்சாயத்துக்கள் நடைபெற்றன என்பது குறித்தும், எந்தவொரு சங்கதியையும் இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் 2013-ஆம் ஆண்டு எதிரி தரப்பிலிருந்து சட்ட அறிவிப்பு வந்ததாக அ.சா.6 கூறியிருந்தும் கூட அதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. புலன் விசாரணை அதிகாரியும் அதனைப் பெற்று தாக்கல் செய்ய முயற்சிக்கவில்லை. மேலும் எ.சா.ஆ.1 கடிதம் குறித்து தன்னுடைய மகள் கையெழுத்து தான் என அ.சா.6 ஒப்புக்கொண்டுள்ளார். அதில் "my death arrives waiting for it" என்று குறிப்பிடப்பட்டுள்ளதை பார்க்கும் போது மேற்படி ஜெயசுவாசினி ஒரு மன நோயாளியாகவோ அல்லது மனதளவில் பாதிக்கப்பட்டவராகவோ அல்லது தன் இறப்பை தானே தேடிக் கொள்ளும் மனோபாவத்திற்கு தள்ளப்பட்டுள்ள சூழ்நிலையில் இருந்துள்ளதாகவோ தெரிகிறது. எனவே, எதிரிக்கும், அவர் மனைவிக்கும் என்ன காரணத்தினால் பிரிவு ஏற்பட்டது என்பதை குறித்து அரசு தரப்பில் பஞ்சாயத்தார்களை விசாரித்து மெய்ப்பிக்கவில்லை. அ.சா.5 சிவக்குமார் மற்றும் அ.சா.8 வடிவேல் ஆகியோர் எந்தவிதத்திலும் அரசு தரப்பு வழக்கிற்கு வலு சேர்க்கும் விதத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.9 ஷீலாமணி சா.பொ.4 முதல் 9 உடன் புலன் விசாரணை அதிகாரியிடம் தனியறிக்கை சமர்ப்பித்தவராகும். அ.சா.10 திரு.முனிராசன் தடய அறிவியல் துறையின் துணை இயக்குநராகும். இவர்

WEB COPY

தடயப்பொருட்களை கைப்பற்றி புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.13 டாக்டர். புவனா தன் சாட்சியத்தில் 30.09.2014-ஆம் தேதி அதிகாலை 4.25 மணிக்கு சுஹாசினியை பரிசோதித்து விட்டு அவர் இறந்து விட்டதாக அ.சா.ஆ.9 விபத்து பதிவேடு வழங்கியதாக கூறியுள்ளார். தான் பரிசோதித்த பெண்மணி, தான் பரிசோதித்த போது இறந்து 1 -லிருந்து 2 மணி நேரங்கள் ஆகியிருக்கலாம் என்று கூறியுள்ளார். இவரது சாட்சியத்தின்படி பார்க்கும் போது குறைந்தபட்சம் 3.25 மணிக்கே ஜெயசுவாசினி இறந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது. எனவே, அரசு தரப்பு வழக்கிற்கு மாறுபட்டு அ.சா.11 டாக்டர் புவனாவின் சாட்சியம் அமைந்துள்ளது என்பது தெரிகிறது. அவர் தன் சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில் தனக்கு விபரங்கள் சொன்னது முதல் நிலைக் காவலர் ரங்கநாதன் தான் ஆகும் என்றும் கூறியுள்ளார். அ.சா.ஆ.9 விபத்து பதிவேட்டை பார்க்கும் போது நோயாளியின் பெயர் ஜெயசுஹாசினி என்றும், சேலம், குகைப் பகுதியை சேர்ந்த ஏ.பி.சண்முகம் மகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி செய்தி தனக்கு முதல் நிலைக் காவலர் ரங்கநாதன் சொல்லித்தான் தெரியுமென்று அ.சா.11 டாக்டர் புவனா கூறியுள்ளார். ஆனால் இறந்த பெண்மணியின் பெயரும், அவரது தந்தை மற்றும், தந்தையின் விலாசம் ஆகியவற்றை அ.சா.7 முதல் நிலைக் காவலர் ரங்கநாதனுக்கு எவ்வாறு தெரியும் என்பது குறித்து அரசு தரப்பில் எந்த விளக்கமும் கொடுக்கப்படவில்லை. அதில் அ.சா.12 டாக்டர் ஜெயசிங் தன் சாட்சியத்தில் இறந்த ஜெயசுவாசினியின் உடலில் இரண்டு வெளிப்புற காயங்கள் இருந்ததாக கூறியுள்ளார். ஆனால் பிரேத விசாரணை அறிக்கை

WEB COPY

அ.சா.ஆ.26-ல் ஒரு வெளிப்புற காயம் இருந்ததாகத் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தன் சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில் தனது இறுதி கருத்துரையில் இரசாயன பரிசோதனை அறிக்கை மற்றும் குருதியியல் அறிக்கையினை பெற்று வழங்கவில்லையென்றும், குருதியியல் அறிக்கை 25.06.2015-ஆம் தேதி தான் பெறப்பட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அதன் பிறகு தன்னை ஆய்வாளர் விசாரித்தாரா என்பது ஞாபகமில்லை என்று கூறியுள்ளார். இந்த சூழ்நிலையில் அ.சா.20 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை பார்க்கும் போது மருத்துவர் ஜெயசிங் அவர்களை தான் விசாரித்த போது சா.பொ.3 கத்தியை காண்பித்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றும், 10.11.2014-ஆம் தேதி கத்தியை மருத்துவரிடம் காண்பித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 10.11.2014-ஆம் தேதி சா.பொ.3 கத்தி நீதிமன்ற பொறுப்பில் இருந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். நீதிமன்ற பொறுப்பில் உள்ள கத்தியை அ.சா.12 மருத்துவர் ஜெயசிங்கிடம் காண்பித்து வாக்குமூலம் பதிவு செய்திருக்க வாய்ப்பில்லை என்பது தெரிகிறது. அ.சா.13 மாரிமுத்து தன் சாட்சியத்தில் 30.09.2014-ஆம் தேதி அதிகாலை 3.45 மணிக்கு தான் சிங்காநல்லூர் காவல்நிலைய சட்டம், ஒழுங்குப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது அ.சா.1 ஜோதி தன்னை தொடர்பு கொண்டு ஒரு ஆம்புலன்ஸ் உடனடியாக திருச்சி ரோடு, பட்டிணம் ரோடு, செந்தில் மணல் ஆபிஸ் முன்பு அனுப்பி வைக்குமாறு தகவல் சொன்னதால் தான் உடனே புறப்பட்டு காவல்நிலையத்தில் ஒட்டியுள்ள என்.ஜி.மருத்துவமனை வளாகத்திற்குள் சென்று அங்கிருந்து ஆம்புலன்சை அனுப்பி வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் தன் சாட்சியத்தின்

WEB COPY

குறுக்கு விசாரணையில் தனக்கு கிடைத்த தகவல் குறித்து சிங்காநல்லூர் காவல் நிலையத்தின் மூலமாக ரோந்துப் பணியிலிருந்த உதவி ஆய்வாளர் திரு.சண்முகம் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கவில்லையென்று கூறியுள்ளார். மேலும், ஆம்புலன்ஸ் எதற்காக அனுப்ப சொல்லியிருக்கிறார் என்று தான் விசாரிக்கவில்லையென்றும், கொலை முயற்சி சமாச்சாரம் பற்றி தனக்கோ, ஆம்புலன்ஸ் டிரைவருக்கோ தெரியாது என்றும், ஆம்புலன்சில் முதல் உதவி சிகிச்சை கொடுக்க கூடிய அளவிற்கு முன்னேற்பாட்டுடன் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யவில்லையென்றும் கூறியுள்ளார். என்ன காரணத்திற்காக ஆம்புலன்ஸ் அனுப்பப்பட்டது என்பதே தனக்கு தெரிவிக்கப்படவில்லை என்று அ.சா.13 கூறியிருப்பது எந்தவிதத்திலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. மேலும், ஒரு உயரதிகாரி ஆம்புலன்ஸ் அனுப்ப சொல்லி தனக்கு தகவல் சொன்னதாக கூறியுள்ள சூழ்நிலையில் என்ன தேவைக்காக ஆம்புலன்ஸ் தேவைப்படுகிறது என்பதை குறித்து கூட தான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லையென்று அ.சா.13 கூறியிருப்பது வேதனைக்குரியதாகத் தான் இருக்கிறது. அ.சா.14 கே.மாரிமுத்து தன் சாட்சியத்தில் அ.சா.1 தன்னுடைய பணியை 30.09.2014-ஆம் தேதி காலை 3.00 மணிக்கு தணிக்கை செய்ததாக கூறியிருந்தாலும் அதற்கான ஆதாரங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனவே, இவருடைய சாட்சியத்திற்கு எந்த முக்கியத்துவமும் கொடுக்க முடியாது. அ.சா.15 முத்து புகைப்பட கலைஞராகும். அவர் 30.09.2014-ஆம் தேதி காலை 9.30 மணிக்கு தகவல் கிடைத்து 9.35 மணிக்கு சிங்காநல்லூர் காவல்நிலையம் சென்றதாகவும், காலை 9.45 மணிக்குள் புகைப்படங்களை எடுத்து விட்டதாகவும் சாட்சியம்

WEB COPY

அளித்துள்ளார். அவர் எடுத்த புகைப்படங்களில் தடய அறிவியல் பிரிவை சேர்ந்த அதிகாரி தடயங்களை சேகரித்து கொண்டிருந்த போது புகைப்படம் எடுத்ததாகவும், தான் எடுத்த நான்கு புகைப்படங்களில் ஒன்றில் தடய அறிவியல் அதிகாரி தென்படுகிறார் என்றும், தான் புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்கும் போது தான் தடய அறிவியல் அதிகாரி வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.15 புகைப்படத்தாரர் காலை 9.30 மணிக்கு மேல் தான் சிங்காநல்லூர் காவல் நிலையத்திற்கே சென்றுள்ளார். மாறாக, அ.சா.10 தடய அறிவியல் உதவி இயக்குநர் திரு.முனிராசன் 30.09.2014-ஆம் தேதி காலை 7.00 மணியிலிருந்து 8.00 மணி வரை தான் சிங்காநல்லூர் காவல்நிலையத்திலிருந்து தடயப் பொருட்களை சேகரித்துக் கொடுத்ததாக சொல்லியுள்ளார். காலை 8.00 மணிக்கே காவல்நிலையத்தை விட்டு சென்று விட்ட திரு.முனிராசன் அவர்களை காலை 9.30 மணிக்கு மேல் வந்த அ.சா.15 முத்து, தான் எடுத்த புகைப்படத்தில் எவ்வாறு எடுத்திருக்க முடியும் என்பது சந்தேகத்திற்குரியதாகவே உள்ளது. மேலும், தான் புகைப்படம் எடுத்த போது தான் அதாவது காலை 9.30 மணிக்கு மேல் தான் தடய அறிவியல் உதவி இயக்குநரே வந்ததாக அ.சா.15 கூறியுள்ள சூழ்நிலையில் உண்மையில் புலன்விசாரணை அதிகாரி சொல்வது போல தடயப் பொருட்கள் முறைப்படி எடுக்கப்பட்டனவா என்பதே சந்தேகத்திற்குரியதாக உள்ளது. ஒரே நேரத்தில், தடய அறிவியல் நிபுணரையும், புகைப்படகாரரையும் புலன் விசாரணை அதிகாரி மிக முக்கிய தடயமான சா.பொ.1 கார் குறித்து, தடயப் பொருட்களை சேகரிக்கவும், புகைப்படம் எடுக்கவும் அனுமதித்துள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

WEB COPY

அ.சா.16 வினோத் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.17 திருமதி. பர்வீன்பானு தன் சாட்சியத்தில் 30.09.2014-ஆம் தேதி அ.சா.1 திரு.ஜோதி அவர்கள் சமர்ப்பித்த தனிஅறிக்கையை பற்றி அ.சா.ஆ.15 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக கூறியுள்ளார். அவர் தன் சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில் அ.சா.1 ஜோதி தன்னிடம் தனியறிக்கை கொடுத்து விட்டு, சிங்காநல்லூர் காவல் ஆய்வாளர் வரும் வரை தங்கள் காவல்நிலையத்தில் தான் இருந்தார் என்றும், இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட பெண் இறந்து விட்டார் என்பதை நிலைய பொறுப்பதிகாரி மாரிமுத்து தன்னிடம் சொல்லி தெரிந்து கொண்டதாகவும், அ.சா.1-ன் தனியறிக்கையில் மேற்படி சங்கதி உள்ளது என்றும், இந்த வழக்கில் அரசு மருத்துவமனை அவுட் போஸ்ட் போலீசார் தங்கள் காவல்நிலையத்திலிருந்த நிலைய பொறுப்பதிகாரி மாரிமுத்துவிடம் இவ்வழக்கு சம்பந்தப்பட்ட பெண் இறந்துவிட்டார் என்ற தகவலை சொல்லியிருந்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மற்றும் காவல் நிலைய பொறுப்பதிகாரி ஒருவர் காவல் நிலையத்திலேயே இருந்துள்ள சூழ்நிலையில் ஏன் அவரிடம் புகாரை அ.சா.1 கொடுக்கவில்லையென்பதற்கு எந்தவொரு விளக்கமும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. அ.சா.18 திரு.வெங்கடேஸ்வரன் கோவை வட்டார தடய அறிவியல் அலுவலர் இந்த வழக்கு சம்பந்தமாக 17 பொருட்களை ஆய்வு செய்து அ.சா.ஆ.17 உயிரியல் ஆய்வறிக்கை வழங்கியதாகவும், சென்னை பகுப்பாய்வகத்திலிருந்து வழங்கப்பட்ட குருதியியல் அறிக்கை அ.சா.ஆ.18 ஆகும் என்றும், இறந்த நபரின்

WEB COPY

குருதியியல் ஆய்வறிக்கை அ.சா.ஆ.19 என்றும், இறந்தநபரின் ரத்த வகை "ஏ" வகையை சார்ந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.19 ஹேமந்தகுமார், திருநெல்வேலி முதன்மை சார்பு நீதிபதி ஆவார். அவர் தன் சாட்சியத்தில் சாட்சிகள் கதிர்வேல், ஜெயராமன், குமரேசன் ஆகியோர்களிடம் கு.வி.மு.ச.பிரிவு 164-ன் படி வாக்குமூலம் பதிவு செய்தவராகும். அ.சா.20 திரு.மகஸேஸ்வரன் புலன்விசாரணை அதிகாரி தன் சாட்சியத்தில் 30.09.2014-ஆம் தேதி காலை 5.30 மணிக்கு அ.சா.ஆ.15 முதல் தகவல் அறிக்கையின் நகலை பெற்று, புலன் விசாரணை தொடங்கியது குறித்தும், எதிரியிடம் சாட்சிகளின் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தது குறித்தும், அதனடிப்படையில் சா.பொ.3 கத்தி கைப்பற்றியது குறித்தும், எதிரி சம்பவத்தின் போது அணிந்திருந்த சா.பொ.18 பேண்ட் மற்றும் சா.பொ.19 சட்டை ஆகியவற்றை கைப்பற்றியது குறித்தும், இயங்கும் தடய அறிவியல் ஆய்வக உதவி இயக்குநர் திரு.முனிராசன் அவர்கள் சா.பொ.1 காரிலிருந்து சேகரித்த சா.பொ.10 முதல் 17 வரை உள்ள தடயப் பொருட்களை கைப்பற்றியது குறித்தும், பின்னிட்டு சா.பொ.3 கத்தி கைப்பற்றியது குறித்தும், சம்பவ இடத்தில் புகைப்படம் எடுத்தது குறித்தும், பிரேதத்தின் மீது பிரேத விசாரணை நடத்தியது குறித்தும், பிரேத பரிசோதனைக்கு பிரேதத்தை அனுப்பியது குறித்தும், பிரேதத்தின் மீதிருந்த உடைமைகளை அ.சா.ஆ.8 படிவம் 91-ன் மூலம் கைப்பற்றியது குறித்தும், நீதிமன்றத்திற்கு வேண்டுகோள்கடிதம் கொடுத்து அதனடிப்படையில் சாட்சிகள் ஜெயராமன், கதிர்வேல், குமரேசன் ஆகியோர்களிடம் கு.வி.மு.ச.பிரிவு 164-ன் படி வாக்குமூலங்கள் பதிவு செய்ய ஏற்பாடு செய்தது குறித்தும், பிறகு மேற்படி

WEB COPY

சாட்சிகளை தான் விசாரித்தது குறித்தும், இறப்பு தகவல் கொடுத்த டாக்டர்.புவனா மற்றும் பிரேத பரிசோதனை செய்த டாக்டர்.ஜெயசிங் அவர்களை விசாரித்தது குறித்தும், பின்னிட்டு பிற சாட்சிகளை விசாரித்து புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் தன் சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில் "சாதாரணமாக புகார் கொடுக்கப்படும் போது காவல்நிலையத்தில் இருக்கும் காவல் நிலைய இருப்பு / பொறுப்பு அதிகாரியிடம் தான் புகார் கொடுப்பார்களா என்றால் ஆமாம்." என்று கூறியுள்ளார். ஆனால் இவ்வழக்கில் அ.சா.1 ஜோதி சிங்காநல்லூர் காவல் நிலையம் வந்த போது இருந்த காவல் நிலைய பொறுப்பதிகாரியிடம் ஏன் புகார் கொடுக்கவில்லையென்பதற்கு எந்தவொரு விளக்கமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. அ.சா.1 ஜோதி ஆய்வாளர் தங்கள் காவல்நிலையத்திற்கு காலை சுமார் 5.00 மணிக்கு வந்து விட்டு காலை 8.00 மணிக்கு திரும்பி சென்று விட்டார் என்று அ.சா.20 கூறியுள்ளார். ஆனால் அ.சா.1 தன் சாட்சியத்தில் தான் புகார் கொடுத்த பிறகு எதிரியை காவல் நிலையத்தில் ஒப்படைத்து விட்டு தன் வீட்டிற்கு சென்று விட்டு மீண்டும் காலை 7.00 மணிக்கு சிங்காநல்லூர் காவல்நிலையம் வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 மற்றும் 20 ஆகியோரது சாட்சியம் ஒன்றுக்கொன்று முரண்பட்டு உள்ளது. மேலும், அ.சா.20 புலன் விசாரணை அதிகாரி தான் காவல்நிலையத்திற்கு வந்த போதே அ.சா.1 ஜோதி ஆய்வாளர் காவல்நிலையத்தில் இருந்தார் என்று கூறியுள்ளார். 29.09.2014-ஆம் தேதி இரவு ரோந்துப் பணிக்காக அனுப்பப்பட்ட பி5 சிங்காநல்லூர் காவல் உதவி ஆய்வாளர் சண்முகம் என்பவருக்கு இந்த வழக்கில் எந்தவொரு

WEB COPY

தொடர்பையும், பணியையும் ஏன் கொடுக்கவில்லையென்பதற்கு காரணம் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும், இரவு ரோந்துப் பணியிலிருந்த உதவி ஆணையர் திரு.வெங்கடேஷ் அவர்களுக்கு தானோ, ஜோதியோ (அ.சா.1) வழக்கு சம்பவம் குறித்து தகவல் தெரிவிக்கவில்லையென்று அ.சா.20 கூறியிருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. 108 ஆம்புலன்சை திரு.ஜோதி ஆய்வாளர் அழைக்காமல் இருந்துள்ளதற்கு சிறப்பு காரணங்கள் எதுவும் தன்னிடம் அ.சா.1 ஜோதி தெரிவிக்கவில்லையென்றும், அ.சா.20 புலன் விசாரணை அதிகாரி கூறியுள்ளார். இறந்து போன ஜெயசுவாசினியை உயிருடன் பார்த்த நபர் முதல் நிலைக் காவலர் ரங்கநாதன் ஆகும். ஆனால் பிரேத விசாரணை அறிக்கையில் கடைசியாக உயிருடன் பார்த்தவர் ஜோதி என்று குறிப்பிட்டுள்ளது என்பது தவறு என்று புலன் விசாரணை அதிகாரி ஒப்புக் கொண்டுள்ளார். எதிரியை தான், தான் கைது செய்ததாகவும், தான் கைது செய்யும் வரை எதிரியை பார்த்த எந்தவொரு காவல் அதிகாரியுமே ஏன் கைது செய்யவில்லையென்று விசாரித்து தெரிந்து கொண்டீர்களா என்று, அ.சா.20 புலன் விசாரணை அதிகாரியிடம் வினா எழுப்பிய போது அவர் விசாரித்ததாகவும், எந்தவொரு காவல் அதிகாரியும் காரணங்கள் எதுவும் தெரிவிக்கவில்லையென்றும் கூறியுள்ளார். எதிரியை முதன் முதலாக பார்த்த அ.சா.1 ஜோதியும், அ.சா.1-டமிருந்து தனியறிக்கை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.17 திருமதி.பர்வீன் பானுவும் ஏன் எதிரியை கைது செய்யவில்லையென்பது சந்தேகத்திற்கும், வியப்பிற்கும் உரியதாக உள்ளது. மேலும் அ.சா.20 புலன் விசாரணை அதிகாரி தன் சாட்சியத்தில்

WEB COPY

"எதிரிக்கும், இறந்து போன ஜெயசுவாசினிக்கும் யார் பஞ்சாயத்து செய்தார்கள் என்று நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை..... எதிரி அனுப்பி இறந்து போன மனைவி பெற்றுக் கொண்ட அறிவிப்பு எதுவும் நான் சாட்சிகளை விசாரித்து பெறவில்லை. குடும்ப நீதிமன்றத்தில் பரஸ்பர விவாகரத்து சம்பந்தமாக என்ன நடைமுறை கடைபிடிக்கிறார்கள் என்று நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. பரஸ்பர விவாகரத்துக்கு வழக்கு தாக்கல் செய்யும் முதல் நாளில் கணவனும், மனைவியும் ஆஜராக வேண்டும் அதற்கு பின் ஆறு மாதம் கழித்து வாய்தா போடப்படும். அன்று கணவனோ அல்லது மனைவியோ நீதிமன்றத்திற்கு வரவில்லையென்றால் அந்த மனு தள்ளுபடி செய்யப்படும். கோர்ட்டிற்கு வெளியே விவாகரத்து மனுவில் கையெழுத்து வாங்கினால் அது நீதிமன்றத்தில் செல்லாது" என்று சாட்சியம் அளித்துள்ளார். இவ்வாறுள்ள சூழ்நிலையில் விவாகரத்து மனுவில் தன் மனைவியை கையெழுத்து போடும்படி எதிரி வற்புறுத்தியதாகவும், அது தான் கொலை செய்யும் அளவிற்கு தூண்டுதலாக இருந்தது என்றும், அரசு தரப்பில் கூறுவது எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. மேலும், எதிரியும், அவரது மனைவியும், டிகிரி படித்துள்ளார்கள் என்று தான் தெரிந்து கொண்டதாகவும் அ.சா.20 கூறியுள்ளார். அவ்வாறிருக்கையில் நீதிமன்றத்திற்கு வெளியே விவாகரத்து மனுவில் கையெழுத்து வாங்க தன் மனைவியை எதிரி வற்புறுத்தியதாக சொல்வது எந்தவிதத்திலும் நம்பக்கூடியதாக இல்லை. மேலும் சம்பவ இடத்திலிருந்து மிக அருகாமையில் உள்ள மருத்துவமனைக்கு உயிருக்கு போராடிக் கொண்டிருந்த ஜெயசுவாசினியை அழைத்துச் செல்லாமல் அரசு மருத்துவமனைக்கு ஏன்

WEB COPY

அழைத்துச் செல்லப்பட்டார் என்று தன் விசாரணையில் எதுவும் தெரியவில்லையென்று அ.சா.20 கூறியுள்ளார். மேலும் காயம்பட்டிருந்த ஜெயசுவாசினியை காப்பாற்றுவதற்கு உடனடியாக அ.சா.1 ஜோதி முதல் உதவி சிகிச்சை அளிக்கவோ, அல்லது வேறு நடவடிக்கையோ எடுத்தாரா என்றால் ஆம்புலன்சிற்கு தெரிவித்தது தவிர வேறு எதுவும் செய்யவில்லையென்றும், ஆம்புலன்சுக்கும் அ.சா.1 ஜோதி நேரடியாக சொல்லவில்லையென்றும் அ.சா.20 புலன் விசாரணை அதிகாரி சாட்சியம் அளித்துள்ளார். உயிருடன் போராடிக் கொண்டிருந்த ஜெயசுவாசினியை உடனடியாக மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தி அவரை காப்பாற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென்பது வருந்தத்தக்க விஷயமாகத் தான் உள்ளது. அ.சா.ஆ.23-ல் கண்டுள்ள பொருட்கள் 30.09.2014-ஆம் தேதி காலை தடய அறிவியல் அலுவலர் முனிராசன் ஒப்படைத்திருந்தும் அவரிடம் சாட்சி கையெழுத்து பெறாமல் அ.சா.1-டம் மட்டும் அ.சா.20 புலன் விசாரணை அதிகாரி ஏன் கையெழுத்து பெற்றுள்ளார் என்பதற்கும் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. அ.சா.14 கே.மாரிமுத்துவை அ.சா.1 ஜோதி ஆய்வாளர் தணிக்கை செய்ததாக பொது நாட் குறிப்பில் உள்ள தகவலை கைப்பற்றியிருந்தும், அது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. அதற்கு சிறப்பு காரணங்கள் எதுவும் இல்லையென அ.சா.20 புலன் விசாரணை அதிகாரி சொல்லியிருந்தாலும் முக்கிய ஆவணமான மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் இருந்துள்ளது வழக்கின் தன்மையை பாதிக்கும் விதத்தில் தான் உள்ளது. மேலும், ஜெயசுவாசினியையும், அவரது இரண்டு குழந்தைகளையும்

WEB COPY

சேர்த்து தான் எதிரியிடம் ஒப்படைத்ததாக அ.சா.4 குமரேசன் கூறியுள்ள சூழ்நிலையில் மேற்படி குழந்தைகள் சம்பவத்தின் போது என்ன ஆனார்கள் என்று தான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்று புலன் விசாரணை அதிகாரி கூறியுள்ளதும், வழக்கை பாதிக்கும் விதத்திலேயே உள்ளது. 30.09.2014-ஆம் தேதி மாலைமலர் கோவை பதிப்பில் இந்த வழக்கு சம்பந்தமாக "இன்று அதிகாலை 3.00 மணியளவில் சந்தோஷ்குமார் சிங்காநல்லூர் காவல்நிலையத்திற்கு காரில் பிணத்துடன் வந்தார்", என்றும் "பிணத்துடன் காவல்நிலையம் வந்ததாகவும், செய்தி வெளியாகி இருந்ததா என்று அ.சா.20 புலன் விசாரணை அதிகாரியிடம் வினா எழுப்பப்பட்ட போது செய்தித்தாள்களில் அவ்வாறு தான் செய்திகள் வெளியாகி இருந்தது என்று கூறியுள்ளார். கு.வி.மு.ச.பிரிவு 313-ன் படி எதிரி விசாரிக்கப்பட்ட போது அவர் தானும், தன் மனைவியும் காரில் வந்து கொண்டிருந்த போது தற்செயலாக தன் மனைவியின் கையில் இருந்த கத்தி தன் மனைவியின் கழுத்தில் குத்தி காயம் ஏற்பட்டு இறந்து விட்டதாகவும், அந்த தகவலை தெரிவிக்க காவல் நிலையம் வந்த போது போலீசார் வழக்கை வேறு விதமாக ஜோடித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்திருப்பதாக கூறியுள்ளார். எந்தவொரு குற்ற வழக்கிலும் வழக்கில் தாக்கல் செய்யும் புலன் விசாரணை அதிகாரி தான் எதிரி அல்லது எதிரிகளுக்கு எதிராக உள்ள குற்ற நோக்கையும், குற்றச் செயலையும் அதனடிப்படையில் ஏற்படும் குற்றச்சாட்டையும் மெய்ப்பிக்க வேண்டிய கடமை கொண்டவர்களாகும். ஏற்கனவே விவரித்துள்ளது போல பரஸ்பர விவாகரத்து வேண்டுமானால் இரு தரப்பினரும் நீதிமன்றத்தில் ஆஜராகி அதன் பிறகு ஆறு மாதம் கழித்து தான் விவாகரத்து வழங்கப்படும் என்பது தெரிந்துள்ள

WEB COPY

சூழ்நிலையில் விவாகரத்து மனுவில் கையெழுத்திடுவதற்காக தன் மனைவியை ஆசை வார்த்தைகள் கூறி கோவைக்கு வரவழைத்தார் என்பது மெய்ப்பிக்கப்படவில்லை. மேலும், அதன் தொடர்ச்சியாக தன் மனைவியை எதிரி கத்தியால் குத்தி கொலை செய்தார் என்பதை பொறுத்தும், நேரடி சாட்சிகள் இல்லாத சூழ்நிலையில், சூழ்நிலை சாட்சிகளை மட்டும் வைத்து பார்க்கும் போது அரசு தரப்பு சாட்சிகளுக்கிடையே மிகுந்த முரண்பாடுகள் தெளிவாக காணப்படுவதால் எதிரி தான் தன் மனைவியை கத்தியால் குத்தி கொலை செய்தார் என்பது மெய்ப்பிக்கப்படவில்லையென்றே தீர்மானிக்கப்படுகிறது.

WEB COPY

31. எதிரி தான், தன் மனைவியின் கழுத்தில் கத்தியால் குத்தி கொலை செய்துள்ளார் என்பது ஐயம் திரிபர மெய்ப்பிக்கப்படவில்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. மேலும் சந்தேகத்தின் நற்பலனை எதிரிக்கு அளிக்கலாம் என தீர்மானித்து எதிரிக்கெதிரான குற்றச்சாட்டு ஐயம் திரிபர அரசு தரப்பில் மெய்ப்பிக்கப்படவில்லையென்று தீர்மானிக்கப்படுகிறது.

32. முடிவாக, எதிரி மீது இ.த.ச.பிரிவு 302-ன் படியான குற்றச்சாட்டு ஐயம் திரிபர மெய்ப்பிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள சான்றுப் பொருள் 1 TN37 BW 3340 நிஷான் சன்னி கார் வாகனத்தை இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்போ, அல்லது மேல்முறையீடு இருப்பின் அது முடிந்த

பின்னரோ அதன் உரிமையாளரிடம் உரிய ஆவணங்களின் அடிப்படையில் ஒப்படைக்கவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. சான்று பொருட்கள் 3 முதல் 11 மற்றும் 13 முதல் 19 வரை உள்ளவைகள் உபயோகமற்றவைகள் என்பதால் இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்போ, அல்லது மேல்முறையீடு இருப்பின் அது முடிந்த பின்னரோ அழித்து விட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. சான்றுப் பொருட்கள் 2 (4 எண்ணிக்கைகள்), புகைப்படங்கள் என்பதாலும், சா.பொ.13 பச்சை நிற பேப்பர் எழுதப்பட்ட தாள்கள் (2 தாள்கள்) மற்றும் வெள்ளை நிற பேப்பர் எழுதப்பட்ட தாள்கள் ( 2 தாள்கள்) ஆகியவைகளையும் வழக்குக் கோப்புடன் இணைத்து வைக்கவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. எதிரியை பொறுத்து ஏற்கனவே உள்ள பிணைப்பத்திரங்கள் மேல் முறையீடு காலத்திற்கு பின்போ, அல்லது மேல்முறையீடு இருப்பின் அது முடிந்த பின்னரோ ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

WEB COPY

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2016-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

அமர்வு நீதிபதி
குண்டுவெடிப்புவழக்கு விசாரணைக்கான
சிறப்பு நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.

**<u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் பட்டியல்</u>:-**

| | | |
|---|---|---|
| 1. அ.சா.1 | - | திரு. ஜோதி, காவல் ஆய்வாளர், சரவணம்பட்டி |
| 2. அ.சா.2 | - | கதிர்வேல் |
| 3. அ.சா.3 | - | ஜெயராமன் |
| 4. அ.சா.4 | - | குமரேசன் |
| 5. அ.சா.5 | - | சிவக்குமார் |
| 6. அ.சா.6 | - | ஏ.பி.சண்முகம் |
| 7. அ.சா.7 | - | திரு.ரங்கநாதன், முதல்நிலைக்காவலர் |
| 8. அ.சா.8 | - | வடிவேல் |
| 9. அ.சா.9 | - | திருமதி.ஷீலாமணி, தலைமைக் காவலர் |
| 10. அ.சா.10 | - | திரு.முனிராசன், தடய அறிவியல் அலுவலர், கோவை |
| 11. அ.சா.11 | - | டாக்டர்.புவனா, அரசு மருத்துவமனை, கோவை |
| 12. அ.சா.12 | - | டாக்டர்.ஜெயசிங், அரசு மருத்துவமனை, கோவை |
| 13. அ.சா.13 | - | திரு.மாரிமுத்து, சிறப்பு உதவி ஆய்வாளர் |
| 14. அ.சா.14 | - | திரு.கே.மாரிமுத்து, சிறப்பு உதவி ஆய்வாளர் |
| 15. அ.சா.15 | - | திரு.முத்து, புகைப்பட நிபுணர். |
| 16. அ.சா.16 | - | வினோத் |
| 17. அ.சா.17 | - | திருமதி. பர்வீன்பானு, உதவி ஆய்வாளர் |
| 18. அ.சா.18 | - | திரு.வெங்கடேஸ்வரன்,வட்டார தடய அறிவியல் அலுவலர், கோவை. |

WEB COPY

19. அ.சா.19 - திரு.ஹேமந்தகுமார், முதன்மை சார்பு நீதிபதி, திருநெல்வேலி

20. அ.சா.20 - திரு.மகேஸ்வரன், காவல் ஆய்வாளர்

**<u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியின் பட்டியல்:-</u>**

ஒருவரும் இல்லை

**<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்களின் பட்டியல்:-</u>**

1. அ.த.சா.ஆ.1 - அ.சா.1 கொடுத்த தனியறிக்கை

WEB COPY

2. அ.த.சா.ஆ.2 - ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2-ஆம் கையெழுத்து

3. அ.த.சா.ஆ.3 - கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து

4. அ.த.சா.ஆ.4 - நீதித்துறை நடுவர் எண்.7 நீதிமன்றத்தில் கு.வி.மு.ச.பிரிவு 164-ன்படியான வாக்குமூலத்தில் உள்ள மூன்று கையெழுத்து

5. அ.த.சா.ஆ.5 - எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.3-ன் கையெழுத்து

6. அ.த.சா.ஆ.6 - கைப்பற்றுதல் மகசர் (கத்தி)

7. அ.த.சா.ஆ.7 - பிரேத பரிசோதனை செய்ய வேண்டி ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள்கடிதம்

8. அ.த.சா.ஆ.8 - படிவம் 91

9. அ.த.சா.ஆ.9 - விபத்து பதிவேட்டு நகல்

10. அ.த.சா.ஆ.10 - பிரேத பரிசோதனை அறிக்கை

11. அ.த.சா.ஆ.11 - இரசாயன பரிசோதனை அறிக்கை

12. அ.த.சா.ஆ.12 - இறுதி கருத்துரை

13. அ.த.சா.ஆ.13 - குருதியியல் ஆய்வறிக்கை

14. அ.த.சா.ஆ.14 - பார்வை மகசரில் உள்ள அ.சா.16-ன் கையெழுத்து

15. அ.த.சா.ஆ.15 - முதல் தகவல் அறிக்கை

16. அ.த.சா.ஆ.16 - தடயப் பொருட்களை பகுப்பாய்வு செய்ய வேண்டி நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட கடிதம்

WEB COPY

17. அ.த.சா.ஆ.17 - உயிரியல் ஆய்வறிக்கை

18. அ.த.சா.ஆ.18 - தடயப் பொருட்களை பொறுத்து சென்னை பகுப்பாய்வகத்திலிருந்து வழங்கப்பட்ட குருதியியல் ஆய்வறிக்கை

19. அ.த.சா.ஆ.19 - இறந்த நபரின் ரத்த ஆய்வை பகுப்பாய்வு செய்து வழங்கிய குருதியியல் ஆய்வறிக்கை

20. அ.த.சா.ஆ.20 - வாக்குமூலங்கள் பதிவு செய்ய அனுப்பப்பட்ட வேண்டுகோள் கடிதம் (ஆர்.நெ. 4729 தேதி 17.10.2014)

21. அ.த.சா.ஆ.21 - அழைப்பாணை (3 சாட்சிகளுக்கு அனுப்பியது)

22. அ.த.சா.ஆ.22 - படிவம் 91 (பேண்ட், சட்டை)

23. அ.த.சா.ஆ.23 - படிவம் 91 (கார்)

24. அ.த.சா.ஆ.24 - பார்வை மகசர்

25. அ.த.சா.ஆ.25 - மாதிரி வரைபடம்

26. அ.த.சா.ஆ.26 - பிரேத விசாரணை அறிக்கை

**எதிரி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்களின் பட்டியல்:-**

1. எ.சா.ஆ.1 - எதிரிக்கு இறந்து போன ஜெயசுவாசினி தன் கைப்பட எழுதிய கடிதத்தின் புகைப்பட நகல்

WEB COPY

**சான்று பொருட்களின் பட்டியல்:-**

**(பி.ஆர்.எண்.10/2016)**

1. சா.பொ.1 TN37 BW 3340 என்ற பதிவு எண் கொண்ட நிஷான் சன்னி என்ற மெட்டாலிக் கலர் கார் - ஒன்று Engine No.BTK AR00N1741A K23K. Chasis No.MDH BDAN 17C3008393

2. சா.பொ.2 புகைப்படங்கள் (4 எண்ணிக்கைகள்)

3. சா.பொ.3 ரத்தக்கறை படிந்த கருப்பு கைப்பிடியுடன் கூடிய ஸ்டீல் கத்தி ஒன்று.

4. சா.பொ.4 வெட்டி எடுக்கப்பட்ட ரத்தக்கறை படிந்த வெளிர் மஞ்சள் நிறத்தில் பச்சை மற்றும் ஆரஞ்சு கலரில் மாங்காய் படம் போட்ட சுடிதார் - ஒன்று

| | | |
|---|---|---|
| 5. | சா.பொ.5 | வெட்டி எடுக்கப்பட்ட ரத்தக்கறை படிந்த வெளிர் மஞ்சள் நிறத்தில் பச்சை மற்றும் ஆரஞ்சு கலரில் மாங்காய் படம் போட்ட துப்பட்டா -ஒன்று |
| 6. | சா.பொ.6 | வெட்டி எடுக்கப்பட்ட ரத்தக்கறை படிந்த பச்சை கலர் லெக்கின்ஸ் பேண்ட் - ஒன்று |
| 7. | சா.பொ.7 | வெட்டி எடுக்கப்பட்ட ரத்தக்கறை படிந்தகருநீல கலரின் பூப்போட்ட ஜட்டி - ஒன்று |
| 8. | சா.பொ.8 | வெட்டி எடுக்கப்பட்ட ரத்தக்கறை படிந்த சந்தனக்கலர் பிரா - ஒன்று |
| 9. | சா.பொ.9 | வெட்டி எடுக்கப்பட்ட ரத்தக்கறை படிந்த சிம்மிஸ் ரோஸ் கலர் - ஒன்று |
| 10. | சா.பொ.10 | ரத்தக்கறையுடன் கூடிய காரின் முன் புற இடது பக்க சீட்டிற்க கீழ் போடப்பட்டிருந்த கருப்பு நிற ரப்பர் மிதியடி - ஒன்று |
| 11. | சா.பொ.11 | பிரௌன் கலர் காலணி - 1 ஜோடி |
| 12. | சா.பொ.12 | ரத்தக்கறை படிந்த அச்சடிக்கப்பட்ட விவாகரத்து நோட்டீஸ் பச்சை நிற பேப்பர் -2, வெள்ளை நிற பேப்பர் - 2 |
| 13. | சா.பொ.13 | இரத்தக்கறை படிந்த தூய துணி |
| 14. | சா.பொ.14 | காரின் கால் மிதியடியில் இருந்து ஒற்றி எடுக்கப்பட்ட ரத்தக்கறை படிந்த தூய துணி |

WEB COPY

15. சா.பொ.15 பத்திரத்திலிருந்து ஒற்றி எடுக்கப்பட்ட ரத்தக்கறை படிந்த தூய துணி

16. சா.பொ.16 செருப்பிலிருந்து ஒற்றி எடுக்கப்பட்ட ரத்தக்கறை படிந்த தூயத் துணி

17. சா.பொ.17 மாதிரி துணி

18. சா.பொ.18 இடது பக்க தொடை பகுதியில் இரத்தக்கறை படிந்துள்ள கருப்புகலர் பேண்ட் - ஒன்று

19. சா.பொ.19 சந்தன கலரில் வெளிர் நீல கலர் கோடு போட்ட அரைக்கை சட்டையில் ரத்தக்கறை படிந்துள்ளது - ஒன்று

WEB COPY

அமர்வு நீதிபதி
குண்டுவெடிப்பு வழக்கு விசாரணைக்கான
சிறப்பு நீதிமன்றம்
கோயம்புத்தூர்.